# ஜீவானந்தம்

★

'கலைவாணன்

★

கவிதாச்ரமம்

திருவானைக்காவல் P. O., திருச்சிராப்பள்ளி

முதல் பதிப்பு 1951

பதிப்புரிமை

விலை ரூ. 2—0—0

ஹனுமான் பிரஸ்
திருச்சிராப்பள்ளி

RINTED ONLY FOR FRIENDS CIRCULATION

M. I. P. PROJECT
Microfilmed.

PARTICULARS PLEASE CONTACT :

Sri R. RAMASWAMY
TRUNK ROAD
THIRUVANAIKOIL (POST)
TIRUCHIRAPALLI DT.

அரசிகேஷு கவித்வ நிவேதனம்
சிரசி மா லிக மா லிக மா லிக.

**கவிதாச்ரமத்தின்** கன்னிப் பதிப்பு தமிழன்னைக்கு அணியாகிறது. முன்னைப் பழங் கவிஞர் முறைபொருந்த முதிர்ந்ததிது. சித்தர்வழியில் வடித்திட்ட புத்தமுதம். நிலவாழ்வின் நிறைகோல். வாழ்வின்பத்தின் வழிகாட்டி.

**கலைவாணன்** இலக்கிய உலகில் புதியவரல்ல. விலையாக்கப் பொய்க்கவிதை வியாபாரம் நடக்கின்ற காலத்தில் நிலையான கவிதை தர நிற்கின்ற கவியரசர். சங்கம் கண்ட தமிழகத்தில் என்றென்றும் மங்காத புலமுடையார் குலமும், காலமும் இதனைக் காணும்.

**இதனைத்** தொடர்ந்து கவிஞரின் கவிதை நூல் வடிவில் முறையாக வெளிவரும். உண்மை கவிதைகளின்பொருட்டு ஏங்குகின்ற தமிழகத்தில்—அவற்றிற்கு உயர்வான வரவேற்பு உண்டாவது உறுதி.

**மக்களின்** காட்சிக்கப்பால் மறைந்து கிடந்த இந்நூலை தக்கமுறையில் அச்சிட்டு தமிழகத்துக்களிக்க உவப்புடன் உதவிய நண்பருக்கெல்லாம் நன்றியுரைக்கிறோம்.

வணக்கம்.

—கவிதாச்ரமவாசிகள்.

# முன் வாயில்

வலிமை மிக்க ஒரு மனிதன் மிகுந்த சுமையைத் தாங்கிக் கொண்டு வழி நடந்தான். சில மருத்துவர்கள் அவனைக் கண்ணுற்றனர். "இவ்வளவு சுமையைத் தூக்குதல் இயலாது" என்றார் ஒரு மருத்துவர். "அது தீங்கேயாகும்" என்றார் மற்றொருவர். அவர்கள் அறிவில் நம்பிக்கையுள்ள மனிதன் சுமையை இறக்கி விட்டான். "உனக்கு நோயிருக்கும் போலிருக்கிறதே" எனக் கூறி ஒருவர் அவனைப் பரிசோதித்தார். வேறொருவர் அவன் நோயை ஆராயு முன்பே அவனுக்கென்று மருந்து கொணர்ந்தார். மனிதன் உட்கார்ந்தான், படுத்தான், பாயும் படுக்கையுமானான். மருத்துவர் ஆராய்ந்து ஆராய்ந்து மருந்து கொடுக்கக் கொடுக்க அவன் மரண வாயிலை அடைந்தான்.

இது கதையல்ல: மனிதனின் இனவளர்ச்சியில் இவை உண்மையான நிகழ்ச்சிகள். இயற்கை அழகுமிக்க உலகம் ஆதிமனிதனின் இன்பக் காவாக இருந்தது. இதனிடையே அவன் உலாவித்திரிந்தான். அவன் அறிவுக்கும் ஆற்றலுக்கும் விலங்குகள் அடிவணங்கின. கவலையின் காற்று அவன்மீது உராயவில்லை. இயற்கையான இன்ப வாழ்வில் அவன் ஆழ்ந்திருந்தான். அவன் உடல் வலிமை பெற்றிருந்தது. ஆனால் நாம்—அவனை நாகரிகம் அறியாதவன் என்றழைக்கும் நாம்—ஆயிர ஆயிர ஆண்டுகளுக்குப்பின்னர் தோன்றியுள்ள நாம், அவனைவிட உயர்வடைந்தோமா?—அவனடைந்த இன்பத்தில் அணுவளவேனும் நமக்குளதா?—கவலையின் காற்றேனும் படாமல் ஒதுங்கி நிற்கவேனும் உணர்ந்தோமா?—இல்லையென்றால் நம் வீழ்ச்சிக்கு வித்தெது? இனிமேலேனும் மனிதன் உய்ய வழியுண்டா?

நம்மிலும் வாழ்நாள் குறைந்த பறவைக்குலம் பாடிக்கொண்டிருக்கிறது. நமக்கு அடங்கிக் கிடக்கும் விலங்குகளும் ஓடியாடி இன்பம் காணுகின்றன. அஞ்சிக் கிடக்கும் நாகம்கூட இசையிலே இன்பம் காணுகிறது. குரங்குகள் கும்மாளமடிக்கின்றன. அவற்றை விடப் பலமடங்கு அறிவும், ஆற்றலும் உடைய நாமோ உளுத்த இதயத்தால் உருக்குலைந்து வாழ்க்கையில் கசப்படைகிறோம்; ஏன்? அவை அறிவின்மையால் இன்புறுகின்றன. அறிவிருந்தால் வருந்துமெனச் சிலர் கருதலாம். நம் இன்பத்திற்கு அறிவு தடைதானா?

மனிதனுக்கு வந்த நோய்தானென்ன? அந்நோயை மாற்ற மருந்தெதுவுமில்லையா? தனி மனிதனுக்கு விடுதலையே கிடையாதா? பூவுலகில் பல "பெரியோர்கள்" அவதாரம் செய்தார்கள். அவர்கள் தந்த அற்புத மருந்துகள் பற்பலவாகும். ஆனால் முடிவோ "ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்" என்றாகி விட்டதே!

சற்றே நிலவுலகைப் பாருங்கள். மனிதன் பாம்புக்கு அஞ்சவில்லை. புலிக்கும், சிங்கத்துக்கும் அஞ்சவில்லை. பூகம்பம், புயல், எரிமலை வெடித்தல் என்பவற்றிற்கும் அஞ்சவில்லை. பஞ்ச பூதங்களும் அவன் பாதத்தைப் பணிகின்றன. ஆனால் அவன் தன்னை நிகர்த்த மனிதனுக்கே அஞ்சுகிறான். மனிதனே மனிதனின் எதிரியாகிவிட்டான். அவனுடைய அற்புத அறிவு அவனையே உண்ண முன்னிற்கின்றது.

நம் முன்னோர்கள் இன்ப வாழ்வு வாழ்ந்தனர். சோற்றால் மடையடைத்து சொர்க்க இன்பம் உலகிடையே நுகர்ந்தனர். வாழ்வின் நிறைவில் கலையின்பம் அவர்களுக்குக் காட்சி அளித்தது வானளாவிய கோபுர மெடுத்தனர். பொன்னாலும், முத்தாலும் மணியாலும் அலங்கரித்த மாளிகைகள் கட்டினர். நிகரற்ற காவியம் வடித்தனர். குகைகளிலே அழியாத ஓவியங்கள் வரைந்தனர் —ஆனால் நாமோ அன்றாட வாழ்க்கைக்கும் அல்லல் அடைகின்றோம். தேவை வாழ்க்கையே நமக்கு தேவலோகமாய்த் தோன்றுகிறதே? ஏன்?

அன்றுள்ள மலைகள் அடியற்றுப் போகவில்லை. கரைபுரண்ட நதிகள் காய்ந்து கிடக்கவில்லை. அன்று அந்நதிகளின் கரைகளில் அவர்கள் உழவு செய்தனர். அமுதம் வடித்து உண்டனர்: ஆடிப் பாடி, போதுபோக்கினர்; நாமோ பாலைவனங்களில் பொற்கனிகள் தேடுகிறோம். ஆடலும் பாடலும் நம் கவலைக்குப் பலியாகிவிட்டன. அன்னபூரணியை அலட்சியம் செய்து சொர்ணலெட்சுமிக்காகத் தவம் கிடக்கிறோம். சொர்ணலெட்சுமியின் கரத்தைப்பற்ற நாம் ரத்த வெறிகொண்டலைகிறோம்.

என்ன தவறு செய்துவிட்டோம்? நாம் நம்மையே பலிகொடுப்பதா? நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற வாழ்வு 30,000 நாள் தானே! இவை முற்றும் நாம் வீணாக்குவதா? பேராசையின் விளை

வால் நாம் காணவேண்டிய உலக இன்பத்தை இழப்பதா? நம் ஐம் புலனும் இன்பதாகம் மறந்துவிட்டனவா? அல்லது மரத்துவிட்டனவா? மனம் இன்பமடைய நினைக்கையில் அறிவு அதனைப் பலியிடுகிறதா? உலகம் சுவையற்றதென்று நாம் கருத என் நேர்ந்தது? நித்திய யௌவன சுந்தரியான நிலமகள் நமக்குக் கசந்துவிட்டாளா? அவள் வடித்துத்தரும் அமுதம் நமக்குச் சுவையூட்டவில்லையா? அதையுண்ண நமக்குப் போதில்லை—வழியில்லை—ஏன்?

நம்மை தேசக் கூட்டுக்குள் அடைத்துவிட்டனர். இனப்பிரிவுச் சங்கிலிகள் நம்மைப் பிணைத்துவிட்டன. சட்டங்களும் சூத்திரங்களும் சாத்திரங்களும் நம்மை அடிமையாக்கிவிட்டன. நமக்கிடப்பட்டுள்ள இத்தளைகளைப் பொன்னணிகள் என்று "அறிவுந்தோர்" வர்ணனை செய்கிறார்கள். அவர்கள் ஆடுகின்ற சதுரங்கத்தில் நாம் காய்களாகிவிட்டோம். நீதிகளும். தருமங்களும் சட்டங்களும் விரிந்துகிடக்கின்றன. பாம்பைத் தொழுவதும், பாம்பை அடிப்பதும் சாத்திர சம்மதமானவையே. கொலையைத் தீதென்றதும், போராட்டத்தைப் போற்றியதும் சட்டசபைகளே. பசுமாட்டைக் கொலைசெய்வது தீதென்பதும் செருப்புதானம் சிறந்ததென்பதும் தருமங்களே. இவற்றை ஆராய நம் வாழ்நாள் போதுமானதல்ல. நம்மைப் பற்றியுள்ள வலையின் முடிச்சுகளை நம்மால் அவிழ்க்கமுடியவில்லை.

'என்ன அறிவின்மையான வாதம்' (!) என்று சிலருக்குத் தோன்றலாம். பரந்த மனித இனத்தில் ஒழுங்குவேண்டாமா என்றவர்கள் கேட்பார்கள். நம் இன்னலுக்கெல்லாம் மனித இனத்தொகை வளர்ச்சியே காரணம் என்றும் வாதம் புரிவார்கள்-ஒழுங்கு ஒரே வகையானதோ? ஒழுங்கு வெறும் கொள்கையே தானோ? நடைமுறையோ? உலகம் இதன் வழி நடக்கிறதோ? அவை காலத்தோடு ஒட்டியதோ? நாட்டோடு இணைந்ததோ? நம் வளர்ச்சியில் இடையில் முளைத்த புல்லுருவியோ?—அவற்றை தனித்தனி காணுதல் வேண்டும். நிற்க, மனிதனுக்கு இனத்தொகையோ வீழ்ச்சியின் வித்து! பிறமனிதர் வாராதிருக்க வேலி தடுத்து சிறு தொகையோர் பெரு நிலத்தில் வாழ்கின்ற சிறுமையிவர்கள் கண்களில் என் படவில்லை? உலகத்தின் சில பாகங்களில் உண்பாரின்றி கூலத்தின் பெரும்பாகம் நிலத்திற்குக் குப்பையுரமாகிறதே! மதிப்பை நிலை நாட்ட, பொருள்கள் கடலில் எறியப்படுகின்றனவே!

உலகில் இடமில்லையா? விண்ணளாவி நிற்கும் மலைகளிலி ருந்து வரும் ஜீவ நதிகள் வரண்டு விட்டனவா? என்றும் குன்றாத தரை இன்றைக்குப் பயன்தர மறுத்துவிட்டதா? பருவம் தவறாது பழுக்கும் மரங்கள் பழுக்க மறுத்துவிட்டனவா? சூரியன் தேசிழந்து சாம்பராகிவிட்டானா? ஏன் நாம் ஏங்கவேண்டும்? அதோ நில மகள் தேவை வாழ்க்கைக்குத்தானா-அன்று-உயர்ந்த இன்ப வாழ்க் கைக்கும் ஏற்ற பொருள் யாவற்றையும் தர அன்புடன் அழைக்கின் றாள். ஆனால் அவளழைப்பை நம்மால் அறிந்துகொள்ள இயல வில்லை. அறிந்துகொண்டாலும் இன்பம் அடைய சட்டங்கள் வழி விடப்போவதில்லை.

மனிதனைத் தனி மனிதனாகவே காணவேண்டும். அவன் பரி பூரணத்வம் பெற்றவன். அவன் உடம்பை மட்டும் அளக்கலாம். அவன் நினைவையும் உணர்ச்சியையும் அளக்கமுடியாது. உணவும் உடையும் கணக்கிடப்படலாம். எண்ணங்கள் ஆக்க சக்தி முதலிய வற்றை அளவிடமுடியாது. மனிதனை உயிரற்ற பொருள்போல் எண்ணிக்கையால் கணக்கிடுதல் எல்லாவிதத்திலும் பொருந்துவ தல்ல. பிறப்பினாலோ, வளர்ப்பினாலோ, சூழ் நிலையாலோ மனி தனை எடைபோடமுடியும் என்பது வீண்வாதம். வெறும் சட்டங் களாலும், சூத்திரங்களாலும், சாத்திரங்களாலும் மனிதன் மனத் தைக் கட்டுப்படுத்த முயல்வது கடலுக்குக் கரைபோடுவது போன்ற நிகழ்ச்சியே. இந்தக் கரைகள் உடைபட்டுக் கொண்டே தாமிருக்கும். இன்பம் நிறைந்த உலகம் துன்பமயமாகத் தோன்ற இவையே காரணமாயின. நிலைமை கணந்தோறும் மாறுபடுவதா லேயே மனிதன் மயங்கவேண்டியிருக்கிறது. வாளும், பீரங்கியும், அணுகுண்டும்அமைதியைக் குலைக்கவில்லை. ஆனால்அதன் பின்புறத் தில் அறிவுப்படை ஏந்திய அரக்கர்களாலேயே அமைதி அழி கிறது. கொடியவர்களையும், மனித இனத்துக்குக் கெடுதி சூழ்பவர் களையும் அடக்குவதற்கு அமைக்கப்பட்டதாகக் கூறப்படும் சட்டம் அக்கொடியவர்களாலேயே ஆக்கப்பட்டு அவர்களை அரண் செய்து காப்பதையும் கண்டுள்ளோம்.

உலகின் பல பாகங்களிலும் கோடிக் கணக்கான வீரர்கள் இவர்கள் கைப் பொம்மைகளாய் இவர் பொருட்டு உயிர்நீத்தனர். இன்னும் நீக்கக் காத்திருக்கின்றனர். பின்னும் வந்துகொண்டே யிருப்பர். இவர்கள் பெருமையை நிலைநிறுத்த பொருளாதார வாதி கள் இந்திர ஜாலம்செய்கிறார்கள். வணிகர்கள் சிறிது பெரிதாக்கும்

சித்துவிளையாடல் செய்கிறார்கள். நெல்வித்து நெல் காய்த்துப் பயன்தருவதைக்காட்டிலும் விரைவாகப் பொன் வித்து பொன் காய்த்து உலகைவிலை பேசுகிறது. வயலில் சென்றாலோ உழுப வரைக் காணவில்லை.

ஒரு சிலரேனும் மகிழ்வோடிருக்கலாம் என்ற நினைப்பும் வீணுகிறது. வாளேந்தி மண்ணுளும் வாழ்வு நிலைத்திருக்கவேண்டுமே என்னும் கவலை கொடியவர்களைத் தின்கிறது. பாம்பைப் பாம்பு விழுங்கிவிடும் என்ற கவலை ஒவ்வொரு பாட்டுக்குமிருக்கிறது. லக்ஷக் கணக்கான பொன்னை அச்சிட்ட நிபுணன் சில நாணயங்களே பெற்றுத் திரும்புகையில் அவன் முகம் அமைதியை இழக்கிறது. வாணிக தந்திரத்துடன் வாணிக தந்திரம் போராடுகிறது. கோடீசுவரன் தன் பொற்குவியல் புரட்சி வெள்ளத்தில் கரைந்து விடுமோ என்றஞ்சுகிறான். அவர்கள் நாட்டமும் இன்பத்திலில்லை. வருங்காலச் சிந்தனைகளில் நிகழ்காலத்தை இழப்பதாகவே இருக்கிறது.

போரில் தோல்வியுற்றவனும் வருந்துகிறான். வாகையணிந்தவனும் மகிழ்ச்சிக்குட்புறத்தில் வருந்திச் சாகிறான். பொன்னைக் குவித்துக் கண்ட கஜினி முகம்மது பெற்றதென்ன? அகிலம்வெல்ல எழுந்த அலெக்சாண்டர் அடைந்ததென்ன? ஊருணி நீர் முழுவதும் ஒருவனுகவே குடித்திட முடியாதே!

இயற்கைதான் நம்வேதம். அதன் போக்கே நம் சட்டம். மற்றவை மனிதன் ஆக்கிக்கொண்டவை. அவை ஓரமுடையதாகவே இருக்கும். மற்ற ஜீவராசிகளனைத்தும் இயற்கை வாழ்விலே இன்பமடைகின்றன. செயற்கை வாழ்வு நம் இனம் முழுமைக்கும் தீங்கு விளைவித்துவிட்டது. தனி மனிதன் தனக்குவேண்டியதை ஆக்கிக்கொண்டு அவற்றைச் சுவைத்து இன்பத்துடன் மரணமடைவதே முறை. அதிக ஆக்கம் எசசத்தைத் தேக்குகிறது. எச்சமும், அவற்றின் ஆக்கமும் பிறர் ஆவலைத் தூண்டிவிடுகின்றன.

உணவுமட்டும் மனிதனின் நோக்கமல்ல. பிறருக்குத் தீங்கு நேராதவகையில் இன்பம் காணுதலே அவன் குறிக்கோள். அவ்வாழ்வின்பமே கலையுணர்ச்சி. அதுவே மெய்ஞ்ஞானம். அதனுேடு ஒன்றுதலே முத்தியோகம். அதன் எல்லையே முத்தி நிலை.

மனிதர்கள் முக அமைப்பில் உள்ள எண்ணற்ற மாறுபாடுகள் போன்று—இன்ப உணர்ச்சியிலும் மாறுபாடுகள் இருக்கின்றன. ஆதலின் அவற்றை வரையறை செய்யாமல் பிறர்க்குத் துன்பமூட்டாத வகையில் எனக்கூறின் அமைவதாகும்—இவ்வளவுடன் அடிப்படை சுருங்க உரைக்கப்பட்டாலும் இதனால் கருத்துப் பிறழ்பாடு நேராமலிருக்க மேலும் சிறிது நோக்கிலோம்.

இடையில் தோன்றிய பெரியோர் கருத்துக்களைப் 'புரட்டு' என்ற கருத்தில் நாம் காணவில்லை. பொய்யான உலகக்கட்டுப்பாடுகளையும் மனித இனத்துக்கு தீங்கு செய்யும் வழிகளையும், சட்டங்களையும், மதத்துக்கு வேற்றுமை மனப்பான்மையையும் கொடுத்தவர்களை ஒதுக்குங்கள். மனித இனத்தின் வளர்ச்சிக்கு வழிவகுத்து, உயர்ந்த சிந்தனைகளையும், தூய இன்ப வாழ்க்கையையும் முறைப்படுத்திய பெரியோர்கள் நாம் வணங்கத்தக்கவரே. ஆயின் அவர்கள் பொன்னுரைகளுக்குப் பித்தளைப் பூச்சிட்டும், அவற்றை கவசமாகக் கொண்டும் தீமை செய்வோரைக் காணுங்கையில் நம் சுடுகோல் அங்கும் பாய்கிறது. ரத்தத்தின் மீது அமைதியை நிலைநாட்ட முடியாததுபோல மதமாச்சரியத்தின் மீது ஆண்டவனாட்சியை ஏற்படுத்தவும் முடியாது.

அறத்தையோ ஆண்டவன் ஆட்சியையோ நாம் மறுப்பதாகக் கொள்ளக்கூடாது. அறம் (இயற்கைக்கு மாறுபட்ட கட்டாய நிலை பெறுமல்) இயற்கையில் ஊறியதாய் மாறுபடாத நன்மையளிப்பதாயின் மறுப்பதுண்டோ? இருந்தாலும், இல்லாவிட்டாலும் கடவுளை ஏற்பது நல்லதாகவே தோன்றுகிறது; பூமத்ய ரேகையை ஒப்புக்கொள்வது போல. தன் நிகழ்ச்சி நிரலில் அடுத்த கணத்தைப்பற்றி அறியாதுள்ள மனிதனுக்கு நம்பிக்கை தேவை. நம்பிக்கை என்னும் மரத்தின் ஆணிவேரே ஆண்டவன். இருளிடை தனித்தேகும் மனிதன் தனக்குத் துணையிருப்பதாகக் கருதினால் மனோதிடம் பெறுவதுபோல ஆண்டவன் நம்பிக்கையும் சிறு வாழ்வில் துணைபுரியும். ஆனால் ஆண்டவனை வாணிகர் பாவையாக்குவதா? கொடியவருக்குக் காப்பாளனாக்குவதா? மக்களை வசம் செய்ய அவர்கள் வீசும் வலையாக மாற்றுவதா?

சிறந்த பெரியோர்களை "அறிவாளர் உலகம்" எவ்வாறு ஏற்றது? சிலுவையில் அறைந்தது. கடலில் எறிந்தது. ஊர் விட்டு ஊர் ஓட்டியது. விஷம் தந்தது. ஆனால் பின்னால் ஏற்றுக்கொண்

டதுபோல் போற்றி மகிழ்ந்தது. செய்கையோ மாறுபட்டு நிற்கிறது. கொள்கைகள் வெறும் வர்ணப் பூச்சுக்கள் தாமா?

உலக அரங்கில் மக்கள் வந்து வந்து போய்க்கொண்டிருக்கின்றனர். அன்றூடம் உலகில் நடைபெறும் எந்த சீர்திருத்தமும் நிலைத்து நிற்பவையல்ல. எல்லா சீர்த்திருத்தத்துக்கும் அடிப்படை ஒன்றுகவே இருக்கும் "பிறர்க்கின்னு செய்யாமை" என்பதே நிரந்தரமான அவ்வடிப்படையாகும். கடவுளைக் கருதினும், கருதாவிடினும் இக்கொள்கையே மக்களுக்கு நன்மை பயக்கவல்லது.

உழைப்புக்கு மதிப்பிடுவதிலேயே பொருளாதாரக் கஷ்டங்கள் உற்பத்தியாயின. மதிப்பும் தானே வளரும் தன்மை பெற்றுள்ளது. உழைப்பைவிட மதிப்பில் மக்கள் மனஞ் செலுத்துகின்றனர். உழைப்பை மதிப்பாக மாற்றுவதே அட்டைகளின் உறைவிடம். உழைப்பின் மதிப்பு பொன்னுனதற்கு பல அடிப்படைக் காரணங்கள் கூறலாம். ஆயின் நெல்விளையும் நிலத்திலும் பொன் விளையும் நிலம் அதிக கவனம் பெற்றதே நம் இன்பத்தின் அடிப்படை மாயாஜாலம்.

மனிதன் உண்மையாக வாழ விரும்பினுல் இனம்பிரித்துக் காணும் தன்மையை விடுத்து தனிமனிதனையே காண முற்படவேண்டும். மனிதனைச் சிறுசிறு கூட்டங்களாகப் பிரித்தமையே 'உலகவுணர்ச்சி' 'ஒற்றுமை' இவற்றைப் போக்கி, தேசவுணர்ச்சி, இனப்பொருமை முதலியவற்றைத் தந்து சிறுமைப் படுத்தியிருக்கிறது. மனிதன் மனிதனையே ஐயத்துடன் நோக்கச்செய்தது. அச்சமே போரின் முதற்படியாகிறது. மனிதன் தன் அண்டையானுடன் அளவளாவி இன்பம் காணமுடியவில்லை. இத்தனை கட்டுப்பாடுகளேன்?

உலகைச் சீர்திருத்துவது நம் நோக்கமன்று. நமக்கு அப்பாற்பட்டது. தனிமனிதன் உய்ய ஒரேவழிதான் தென்படுகிறது. அளவான உழைப்பில் இன்பம் காணட்டும். இல்லறத்தில் சுவை காண்க. போலி அறிவாளரிடமிருந்து விடுபடுக. உயர்வுடைய ஐம்புல இன்பத்தைப் பெறுக. குறுகிய தேச உணர்ச்சியை நீத்து மக்கள் என்பதையே காண்க. பொன்னைக் குவிக்கும் ஆசையை நீக்குக. வெறிகொள்ளும் அளவுக்கு மதம்வேண்டாதிருக்க. வாழ்நாளையும் உடலையும் பேணுக. நாளை நடப்புக்காக நெஞ்சை நலிவுறுத்தாதிருக்க.

அன்று நாமிழந்த சாந்திமகள் தவருது ஆலிங்கனம் செய்துகொள்வாள்.

ஸர்வே ஜனு: சுகினே பவந்து.

## பாயிரம்

அலைவீசி இன்பமொளிர் கலைஞானக் குன்றிருந்
தகமே நிறைக்கவரும் நதியோ!
அருளான பொன் விசிறி மருளா மனத்திருளை
அறவே கெடுக்க எழும் மதியோ!
நிலையேது மற்றுழலும் உலகோர்க் கமைதியின்
நெறியே விளக்கவரும் ஒளியோ!
நிறைவான மண்ணியலின் மறையாங் கரும்பெலாம்
நெறித்தே வடித்திட்ட அமுதோ!
தலைமேலணிந் திதனைத் தமிழ்த்தாய் மகிழ்ந்திட்
தரவே புனைந்திட்ட அணியோ!
தவமே புரிந்த பெரும் சிவயோக சித்தரின்
தனியான நடைவல்ல சதுரன்
**கலைவாணன்** என்னுமொரு கவிராஜன் அற்புதக்
கனவான வாழ்வின்பப் உலகைக்
களிப்பூட்டி மெய்ம்மையின் கருத்தூட்டி வாழ்வினி
கலையூட்டும் தன்மை நிறைத்தே.

—**சக்தீசரணன்.**

பொருளடக்கம்


| | | பாடல் |
|---|---|---|
| 1. | உதயம் | 1 |
| 2. | மானவி | 8 |
| 3. | வாங்குவார் யார்? | 14 |
| 4. | பழித்த பாதை | 23 |
| 5. | நாணம் | 32 |
| 6. | நமது நமக்கே | 38 |
| 7. | கல்பூரமணம் | 45 |
| 8. | காசுக்குதாசன் | 49 |
| 9. | பல நிறக்கொடிகள் | 66 |
| 10. | கடவுளோ? | 88 |
| 11. | முள் வேலி | 102 |
| 12. | மலை புரட்ட எலி | 111 |
| 13. | சாவின்முன் தேவ சுகம் | 115 |
| 14. | காலன் | 123 |
| 15. | அவர்கள் போகட்டும் | 136 |
| 16. | நாகங்கள் ஜாக்கிரதை | 140 |
| 17. | பாலைச்சோலை | 152 |
| 18. | வீடுடையாள் | 167 |
| 19. | போதம் | 172 |
| 20. | ஞானம் | 196 |
| 21. | யோகம் | 202 |

## நூன்முகம்

தெய்விகமாச் சக்தித் திருவருளால் காவியமாம்
பொய்யாத செந்தமிழாற் போற்றினான்—மெய்யான
கலைவாணர் போற்றும் **கலைவாண னப்புலிங்கம்**
விலைகாணா வேதமிது.

ஆனை வனத்தரசி அடியார்தம் நெஞ்சமத
யானைமிசை யேறிவரு மாணழகி—ஞானவொளி
அப்புலிங்கம் போற்றும் அகிலம்மை தன்னருளால்
அப்புலிங்கம் யாத்த அமுது.

—பால பாரதி ச. து. சுப்ரமணிய யோகியார்.

# ஜீவானந்தம்

(வாழ்வின்பம்)

---

★

உதயம்

நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்குவன்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான் பற்றப் பற்றத் தலைப்படுந்தானே !

—திருமந்திரம்

**ஓம்போர் புவ: சுவ: ஓம் தத் சத் விதுர்வரேண்யம்**
**பர்க்கோ தேவஸ்ய தீமகீ தீயோயோன: பிரசோதயாது.**

பூமியை இங்கிதைப்
போன்றுள்ள கோள்களைப்
புத்தியின் போக்கிலே
பந்தாடி யுந்திடும்
காமினீ! இங்குறை
யாமெலாம் இன்புறக்
கண்ணைத் திறந்துயிம்
மண்ணை விளக்கடி! 1

வானின் கிழக்கிருள்
வாயில் கருந்திரை
வருமிளந் தென்றலில்
ஒருபா லொதுக்கவும்
நானிலங் காணவிண்
சூனிய மன்றிலே
நாட்டியம் செய்திடும்
நவமான மோகினீ! 2

அண்டாண்ட கோடியில்
ஆடிக் குதித்தெழும்
அருணா! எழில் ஒளிக்
கருணா விலாசனீ!
கண்டார் மயங்கிடும்
கற்பனா சுந்தரீ!
கவியா னழைக்கிறேன்
புவிமீ திறங்கிவா. 3

மின்னிடும் மீனெலாம்
நின்னருஞ் சேடியர்
மேகங்கள் யாவும்நீ
தாவிடும் குன்றுகள்

கன்னிகா நின்னிடக்
கால்தூக்கி—இங்ஙனம்
ககனத்தி லாடையில்
கதிரும் மலர்ந்ததோ? 4

சொற்பனத் தெல்லையில்
சோர்வின் விளிம்பிலே
சோம்பிடும் என்னுயிர்
கூம்பிடும் போதிலே
அற்புதக் கற்பனை
அருணமா ராணியே!
ஆடியிங் கென்னுளே
கூடிக் குலாவவா. 5

செம்பட்டணிந் தொளிர்ச்
செம்மலர்க் கையொடும்
சிந்தூரப் புன்னகை
சிந்திடும் வாயொடும்
அம்பர மேட்டில்நின்
றாடிக் குதிக்கும்வ
அந்தர சுந்தரீ
அருகில் நடந்துவா. 6

நாள்தோறு மாடினும்
தாள்கள் சலித்திடா
நவையற்ற வானுதை
தேவி உயிர்க்கனல்
மூள்கின்ற துன்னடித்
தூள்பட்ட போதிலே
மூட்டவும் இன்பமின்
னூட்டினில் எங்கணும். 7

மூடிடும் இருள் முகத்திரை முழுவதும் விலக்கி
ஆடிக் கீட்டிசை அழகுற அலர்ந்தசெம் மலர்கள்
சூடிப் பொன்னுஷை சுந்தரி சோபனம் சொல்லத்
தேடி வந்தனள் வாடீயென் நெஞ்சுறை தேவீ! 8

காலை வானமுன் கள்ளிதழ் ஒளிநிறம் காட்டும்
மேலை வானமுன் மேனியின் மெல்லொளி கூட்டும்
சோலை மாமலர்ச் சோபையுன் சொக்கெழில் தீட்டும்
வாலை சக்தியென் வாழ்வெலாம் நின்விழி யூட்டும். 9

கவ்விடும் துயர்க் கட்டுகள் யாவையும் கழல
இவ்விடத்து நம் இன்பொளிப் பட்டெலாம் சுழல
ஓவ்விடாதவிவ் வுலகிடை விண்ணெழில் நிழல
செவ்விதழ்மதுச் சிறுதுளி சிந்திடென் கண்ணே! 10

மதுவை உண்டதில் மதிமயங் கிடுபவ ரெல்லாம்
அதுபெருஞ் சுகம் அளித்திடு மென்பர்நா னதனை
இதுவரைச் சுகித் தின்புற வாய்ப்பிலே னெனினும்
புதுமை காணுவான் புகலிடம் நீயெனப் புகுந்தேன் 11

சொற்ப நேரமே சுகமிது வாயினும் சுவைப்பில்
அற்புதம்பல ஆயிர மாயிர மமைக்கும்
கற்பனைக்கதிர் காந்திடும் கனவுகள் காட்டும்
பொற்பமைந்ததிப் பூவுல கந்தரு போகம். 12

அறிவழிந்திட ஆசையின் அழலினை வளர்த்தவ்
வெறிவழிப் பல விந்தைகள் சிந்திட விரிந்து
சிறிதலர்ந்த செந்தாமரை இதழ்களைச் சேர்த்துப்
பிறவெலாம் அதில் பிரிடு மதுவழி பெறுவோம் 13

## வாங்குவார் யார்?

நீரிலாப் பெரும் பாலையில்
நீண்ட முள்ளொடு நிற்குமோர்
பேரிலாச் செடிப் பூவினைப்
பிய்த்து வந்தழ காகவோர்
நாரில் கோத்து நயம்பட
நல்லதோர் பெய ரிட்டதை
ஊரின் மத்தியில் விற்பதற்
கோர்சிலர் கைக் கொணர்ந்ததும் 14

கொண்டு வந்தவப் புன்மலர்க்
கூடைக் காரரை வீதியில்
கண்டதும் காம் வாங்கிடக்
காமங் கொண்ட கருத்துடன்
அண்டை யில்பலர் சூழ்ந்ததும்
அள்ளிக் காசைக் கொடுத்ததை
முண்டி முட்டி முனைந்துதாம்
முன்னர் வாங்கி முடிந்ததும் 15

வாச மற்றவப் பூவினை
வாங்கி மாந்தர் குழலிலே
நேச மோடணிந் தின்புற
நித்தம் வீணில் முயன்றிடும்
நீசப் போக்கினைக் காணவும்
நின்னு ளம்சற் றிரங்கிடப்
பாச மோடவர்க் கென்றுவிண்
பாரி ஜாதம் கொணர்ந்தனை 16

காரிருட் திரைக் கப்புறம்
      காணும் கற்பனைக் காவிலே
பாரி லென்று மலர்ந்திடா
      பாரி ஜாத மலர்களை
ஓரி யாக யலைந்துநீ
      ஒவ்வொன் றாகத்தங் கூடையில்
கோரிக் கொய்து கொணர்ந்ததை
      கோத்துச் சேர்த்து முடித்தனை 17

கொண்டு வந்ததைச் சேர்த்தபின்
      கூடை யொன்றினி லிட்டதை
மண்டி லத்தெரு மத்தியில்
      மானிடப் பெருஞ் சந்தையில்
கண்டு வாங்குவார் என்றுளம்
      கருதி வந்து திரிந்தனை
எண்டி சையும் சுழன்றனை
      இல்லந் தோறும் புகுந்தனை 18

தேடு வார்க்கரி தாகிய
      தேவ மாமலர்க் கூடையை
வீடு தோறும் புகுந்துநீ
      வீணில் காட்டித் திரியினும்
நாடு வோரெவர்? இப்பெரு
      நாணிலத் துறு மானிடர்
ஆடு போலுனைக் காணவும்
      அப்பு றத்தி லொதுங்கினர் 19

அந்திப் போதினில் வந்துநீ
ஆழ்ந்த காரிருள் சூழ்ந்திடப்
புந்தி மாண்டுபாழ் வையகம்
பூந்துயில் கொளும் மாட்டிலும்
கந்த மாமலர்க் கூடையும்
கையு மாகஅலையினும்
வந்து நன்னயம் கண்டதை
வாங்குதற் கொரு ஆளிலை 20

தூங்கு மானிட வீதியில்
தோள்கள் கன்றித் துவண்டிடத்
தாங்கு மாமலர்க் கூடையும்
தானுமாக அலைந்தபின்
வாங்கு வாரிலை என்றுளம்
வாதனைப் படச் சோர்வுடன்
தேங்கி நிற்குமென் நெஞ்சகத்
தேவி! இங்கு திரும்படி 21

நின்னெழில் மலர் வாங்கவும்
நேர்த்தி கண்டதைச் சூடவும்
இன்னி லத்துறு மானிடர்க்
கென்றும் நெஞ்சில் அறிவிலை
என்னும் உண்மை யறிந்தும்நீ
ஏங்கி வீணில் அலைவதேன்
இன்ன லுற்றது போதும்வா
இங்கு நாம்சுகம் காணுவோம். 22

# பழித்த பாதை

செல்லும் போக்கிலே சிந்தையின் சிந்தனை மறைய
கொல்லக் கூற்றது கூப்பிடக் குமைந்திடும் வரையில்
மெல்ல மெல்லவிம் மேதினி மீதினில் திரிந்து
அல்லு டன்பக லாகிய நாள்பல கழித்தோம். 23

கழிந்த நாள்பல கனவெனக் கரைந்தன வெனினும்
அழிந்த அன்னவை அவலமென் றுனதை யறிந்தும்
விழித்த கண்ணொடு விளக்குடன் கிணற்றினில்
[விழல்போல்
பழித்த பாதையில் பதம்பெறப் பரிவுடன் நடந்தோம். 24

பின்பு வாழ்க்கையில் பெற்றுயர் வெய்திடப் பெரிதும்
இன்பை எண்ணியிவ் விச்சையில் இத்தினம் வரையில்
துன்ப மொன்றையே தோழமை கொண்டுவிந் துரையில்
முன் பிருந்துவீண் முயற்சியில் வாழ்வினை முடித்தோம் 25

போது முற்றுமிப் போக்கினில் போக்கி நாம் போக
யாது மண்டநம் யாத்திரை முடிவினில் மரண
மாது நின்றுதன் மலர்க்கரம் இரண்டையும் நீட்டி
சாது போல்நமைச் சாந்தியில் ஆழ்த்திட அழைக்கும் 26

புலர்ந்த போதிருள் புகுந்திட இரவிடை புரையும்
அலர்ந்த முல்லையும் அப்புறம் காய்ந்துதிர்ந் தழியும்
உலர்ந்த மண்ணும்பின் ஒருதுளி மழைவிழக் குழையும்
மலர்ந்த வாழ்வுமிம் மரபினில் மறைவது கண்டாய். 27

அறமும் அவ்வறம் ஆதரித் துயர்ந்திடும் அன்பும்
திறமும் வாய்மையின் தெய்விகத் தன்மையும் தேய்ந்து
மறமுன் மாண்டன மானிடம் தீம்புசெய் மதியின்
உறமுன் வீழ்ந்தது உலகுயிர் நிலையிது உணர்வாய் 28

பேணரும் பல பெருமைகள் பீறிட மண்ணில்
காணரும் பல கற்பனைச் சுகங்களைக் காட்டி
நாணரும் பல நலம்பட நயம்படப் பேசும்
ஆணவத்திலே வீணராய் ஆருயிர் கழித்தோம். 29

குறியி லாதொரு குரங்கென அலைந்திடும் குணத்தின்
அறிவ ழிந்திட அன்னதன் எல்லையில் இன்ப
வெறியி னின்றுளம் வேண்டிய மட்டிலும் சுகிப்போம்
பிரிவ மேலதன் பின்னிணைந் தின்புறப் பெறுமோ. 30

மந்தை மந்தையாய் மானிடக் கும்பல்கள் கூடி
வந்து நின்றபின் வழிவழி யேகிடும் வையச்
சந்தை மத்தியில் சாந்தியும் இன்பமும் தேடிச்
சிந்தைத் தேர்மிசைச் சிந்தனைப் பாதையில் செல்வோம். 31

கட்டி யணைத்துவுன் கள்ளிதழ் தேன்பெறும்
　　காமம் கனிந்த கருத்துடனே
தொட்ட கரம் தன்மேல் பட்டதுமே நீரில்
　　துள்ளிக் குதித்திடும் கெண்டையைப் போல்
விட்டு விலகியிவ் வெட்ட வெளியிலே
　　வெற்றுக்கிங் கென்னை அலையவிட்டே
எட்டி நகர்ந்தொலி மெட்டி மினுக்கிட
　　இங்கிருந் தெங்கோ நகருகிறாய். 32

மெள்ளக் குலுங்கிடும் வெள்ளிச் சலங்கைகள்
　　மெல்லிசை கூட்டும் மெலுக்கினிலே
கள்ளக் கருத்துடன் துள்ளிக் குதித்திரு
　　கையையும் கொட்டிக் களுக்கெனவே
எள்ளிச் சிரிப்பது கொள்ளத் தொடருமென்
　　எண்ணத்தி னூடு யெதிரொலிக்க
பள்ளத்தில் பாய்ந்திடும் வெள்ளப் புனலெனப்
　　பற்றிய கைவிட்டுச் செல்லுகிறாய். 33

கச்சிடை யேவைத்துக் கட்டிய மார்பினைக்
　　காணவும் வெம்பித் துடிக்கையிலே
இச்சை மறைத்திடும் அச்சம் எதற்கடி?
　　ஏதுக்கு வீணிலே ஓடுகிறாய்?
நிச்சய மற்றதின் நீணில வாழ்விதில்
　　நீயிதுபோல் பொழு தோட்டுவையேல்
மிச்ச மிராதடி மச்சினியே நெஞ்சை
　　மீறி நடப்பது பாவமடி! 34

சுற்றிலு முள்ளவர் சூற்றம் சுமந்திடும்
சூழ்ச்சிக்குன் உள்ளம் வெருண்டனையோ ?
சிற்றறி வாளர்தம் செய்கைகள் ஏதும்நம்
சிந்தையின் ஊற்றை அடைத்திடவோ ?
பற்றுகள் முற்றிலும் அற்ற விளிம்பினைப்
பற்றிச் சுகம்பெற வுற்ற நமை
மற்ற மனிதர்கள் வெற்றுரை என்செயும் ?
மாலையை மாற்றி மகிழ்ந்தி டுவோம். 35

வானம் இதழ்சுவைப் பானகத்தில் கிட்ட
வையகச் சூழல் மறைக்கையிலே
ஈனக் கயவர்கள் ஊன முரைத்திடும்
ஏச்சு மொழிநம் செவிப் படவோ ?
மோனத்திலே எழும் மோகனத்தில் மன
மோகினியே நாமு யர்ந்துவிட்டோம்
. ஆனது ஆகட்டும் போனது போகட்டும்
அன்பே எழுந்தென் அருகினில்வா. 36

மண்ணில் பிறந்துயிம் மண்ணில் வளர்ந்துபின்
மண்ணுடன் மண்ணாய் மடிந்துவிழ
எண்ணற்ற வாகயிங் கெங்கு முலாவிடும்
ஈன மனிதக் கிருமிகளின்
எண்ணம் நமக்கிங் கென்றுமொவ் வாதடி
ஏனதைக் கண்டு தயங்குகிறாய்
உண்ணரும் தேனிதழ் கிண்ணியை தாயிங்கு
உள்ளமட் டும்சுவைத் தின்புறுவோம். 37

தாங்கிய தோள்கள் தளர்வுற
 தன்னந் தனிமையி லேயொரு
பூங்குட லையோடிங் கின்னமும்
 போகத் தயங்கும் எ சுந்தரீ!
எங்குவ தேனடி? இங்கிதன்
 எல்ப ரிந்தந்த மலர்களை
வாங்கி ரசித்து மகிழ்ந்திட
 வையகத் திற்கறி வேதடி? 38

மூடி மறைத்தெழில் மோகன
 மோக முழுதும் பதுக்கிடும்
மாடியின் சாளரப் பூந்திரை
 மஞ்சுகள் சற்றே ஒதுங்கவும்
வேடிக்கை பார்க்கும் விருப்பொடிவ்
 வீதியின் பக்கல் விநோதமாய்
ஆடிவரும் மதி யாயிரம்
 ஆயினும் நின்மலர் சூடுமோ? 39

மானச நந்த வனத்தலர்
 மல்லிகைப் பூக்களைக் கோத்திட
ஆன மலர்சரக் கூடையை
 அன்பொடு தாங்கி யளித்திட
ஈன உலகத் தெருவழி
 ஏதுக்கு வீணில் அலைகிறாய்
வானத்துப் பூக்களை விற்றிடில்
 வாங்குவ தாரடி யிங்கதை? 40

ஆடை திருத்தியென் கைபடா
தப்புறம் இப்படிச் செல்வதேன்?
கூடையைச் சற்றே இறக்கிவை.
கோமளமே! எழில் பாய்ந்திடும்
ஓடை அருகிலோர் பக்கமாய்
உள்ளதோர் பச்சைப் பசும்புல்லின்
மேடை அழகினைப் பாரதன்
மீதில் அமருவோம் இங்குவா. 41

வன்னப் புதுமல ராயினும்
வாச மிகவுள தாயினும்
என்னிறத் தின்பொளி காட்டினும்
என்னரு மையெழில் ராணியே!
மின்னிடை தாங்குமிப் பூக்களை
நீணில மாண்டிடப் பூச்சிகள்
உண்ணி யுணர்ந்து உயர்ந்ததற்
குள்ள விலைதந்து வாங்கவோ? 42

ஆசை மனைவி யழகினில்
ஆர்வ மிலாது புறத்தொரு
வேசையின் வீடு புகுந்தவள்
வேற்றுமை ஏற்று மகிழ்வார்
பூசைக் குரிய புதுமலர்
பூத்திருக்க விட்டு போய்மிகக்
காசைக் கொடுத்துக் களிப்பொடு
காகிதப் பூக்களை வாங்குவார். 43

மற்றவர்க் கீயு மனத்துடன்
    மாநிலச் சந்தைக் களத்திலே
விற்றது போதுமிப் பூக்களை
    வீணில் தெருத் தெருவாகவே
பற்றிய கைகள் துவண்டிடப்
    பாரம் கழுத்தை அழுத்திடச்
சுற்றிச் சுழன்றது போதும்வா
    கூடி நமக்குள் மகிழுவோம். 44

★

முத்தும் வைரமும் முன்பல வீசினும்
    முழுமணிப் பவளம் பல சிந்தினும்
அத்த னைக்குமுள் ளாசையி லாததற்
    கப்பு றத்தில் அமைந்துள தாயவோர்
செத்தை கூளஞ்சேர் குப்பை மேட்டினைச்
    சீய்த்து மண்புழு கொள்ளத் துழாவிடும்
சித்த முற்றதோர் சேவலின் பான்மையில்
    சென்ற ழிந்திட முந்திடும் மானுடம். 45

சேயினும் பெருஞ் செல்ல மளிக்கலாம்
    சீருடன் புதுப் பேரிட் டழைக்கலாம்
பாயி லிட்டுப் படுக்கக் கிடத்தலாம்
    பாலுடன் பழம் நாள்தொரு மூட்டலாம்
ஆயி னுங்குல வற்ப குணத்தினை
    ஆற்றி மாற்றி யமைத்திட வொண்ணுமோ?
நாயி னின்னிலைப் பேய்க்குண முற்றிய
    நானிலத் துறு மானிடம் ஓங்கவோ? 46

ஊன திந்தனை யுப்பினி லிட்டுண
    உள்ளம் வேண்டவும் கொல்லலை நண்ணுவார்
மான மற்ற மனிசர் அவர்கள்முன்
    மாசித் தென்றலில் தேசொளி வீசிட
வான முற்றதோர் கூன லிளம்பிறை
    வாங்கி வந்து வலுவி லளிக்கினும்
தான துற்றதன் தண்ணளி மாந்திடும்
    தன்மை யற்றுத் தயங்கும் தகைமையார். 47

காசிலா ? பல கற்றறி மூடர்கள்
காதலிக்கினும் காலம் மண்ணாக்கிடும்
மாசிலா ? விலை மாற்றிட விற்பது ?
மாலை காய்ந்து மலர்சர காகிட
வீசி வீதியில் வெற்றுக் கெறிவதோ ?
வீணர் செய்திடும் வேலைய தாமடி
கூசிக் கூசிக் குனிந்தின்னும் நிற்பதேன் ?
கூடி மாலையைச் சூடி மகிழுவோம். 48

★

கீட்டிசையில் கதிரெழவும்
கெக்கலித்துச் சிறைவிரித்து
காட்டுமரப் பாதையெலாம்
காற்றுடனே போய்த்திரிந்து
பாட்டிசைத்துக் களித்துலவும்
பறவைகளைப் பாரங்கே.
நாட்டிலுறு மானிடர்—என்
ஞளதுபோல் வாழ்வதடி! 49

அதிகாலைக் கிழக்கிருளில்
ஆதவனைக் கண்டவுடன்
சுதிகூட்டும் அன்னவற்றின்
சொற்பொருள்நீ அறிவாயோ?
கதியற்றுப் பாழிடையே
காலமொரு சிறிதழியப்
புதியவொளி கண்டமனம்
புளகித்துச் சொன்னவையே! 50

பாடுபட்டுத் தேடியதம்
பண்டம் பணமாக்க
வீடுவிட்டுச் சந்தைக்கு
விரைந்துவரும் வண்டிகளில்
ஓடுகின்ற காளைகளின்
உட்கழுத்து வெள்ளிமணி
ஆடுகின்ற நாதமதோ
அருகே ஒலிக்கிறது. 51

அண்டையிலே வந்திதுபார்
    ஆடி அசைந் தோடிவரும்
பண்டம் பல சுமக்கும்
    பாரப் பளுவழுத்த
முண்டிவரும் காளைகளை
    முன்னே முடுக்கியதோ!
வண்டியினை ஓட்டுபவன்
    வாயா லதட்டுகிறான். 52

எழுத்துடனே எழுத்திணைய
    எழுந்துவரும் சொற்களைப்போல்
கழுத்துச் சதங்கைமணி
    கலகலெனப் பாட்டிசைக்க
அழுத்துகின்ற பாரத்தை
    அலட்சியமாய்த் தான்சுமந்து
இழுத்துவரும் மாட்டுவண்டி
    எங்கோ விரைகிறது. 53

கணவரெனப் பொற்றாலி
    கட்டி வலக் கைப்பிடித்து
மணமுடித்த காதலியர்
    மஞ்சமிசை காத்திருக்க
பணமிசையே காதலினால்
    பலசரக்கு வண்டிகளில்
கொணருகின்ற வாணிபராங்
    குருடர்பலர் செல்வதைப்பார்! 54

காணும் விழியெதிரில்
காசினியின் இன்பிருக்க
ஆணுளத்தால் கிட்டுமதை
அள்ளிப் புசியாமல்
வீணுக்குழைத்து நிதம்
வியாபாரம் செய்துடலம்
சாணும் வளர்க்குமிவர்
சந்தோஷம் கண்டாரோ. 55

மாசுகொண் டோங்கும் மமதையில் தங்கள்
மடி நிறைந்த
காசுகொண் டிந்தக் காசினி இன்பெலாம்
காண்பவர் போல்
பேசுவார் பிறரை ஏசுவார் எதையும்
பெறுவ தற்கு
வீசுவார் தமது வெள்ளிப் பணத்து
விராட்டி களே 56

பழுதையைக் கண்டு பாம்பெனக் கொண்டு
பதை பதைத்து
அழுது வீணுக அலறிடும் பாங்கில்
அழுக்க டைந்து
கழுதையும் தீண்டா காகிதக் கத்தையை
கனதன மாய்
தொழுதுமேன் இழிந்த தொழில் பல புரிந்தும்
தொடர்ந் தலேவார். 57

வெருளுற்று வெம்பி வெதும்பித் துடித்து
விதிர் விதிர்த்தோர்
இருளுற்ற பாழில் இருகண்ணு மற்றே
இருப்பவர் போல்
மருளுற்ற மாந்தர் மதியைக் குழப்பும்
மாண்பை யல்லால்
பொருள்நூல் அறிந்த புலவோர்க ளென்ன
புரட்டி விட்டார். 58

வீணர்தம் கையால் வேற்றுமை வித்தை
விதைக்க விட்டு
காணருந் துன்பக் கருவிஷம் பரவிக்
காசினியில்
ஆணவம் அறவும் பெண்ணலம் கெடவும்
அமைந்ததுவே
நாணயம் நமக்கின் னுள்வரை செய்த
நன்மை யெலாம். 59

எட்டரும் இன்பை இரண்டொரு காசுக்
கிழப்பவர் போல்
கட்டுக் கட்டாக காகிதத் திடையே
கதை யளந்து
விட்டதை யல்லால் வேறிந்த மண்ணில்
விரிந்த பல
திட்ட மிட் டோர்கள் திருப்பிய தென்ன
தெரிந்த னையோ? 60

திருவுடைச் செல்வர்கள், தீம்புடைத் தீனர்கள்,
　　தேசமக்கள்
மருவிடும் தலைவர்கள், மன்னர்கள், அன்னவர்
　　மந்திரிகள்,
அருமைசால் குருக்கள் அறிஞர்கள் என்னுமிப்
　　பெருமையெல்லாம்
ஒருசாண் வயிற்றுக் கூண் தேடும் மாந்தர்
　　உயிர்க்கதையே! 61

காசினைத் தூக்குக் கயிருக மாற்றிக்
　　கழுத்தருகே
வீசிப் பிடித்து வியாபார மென்று
　　விதவிதமாய்
பேசிப் பிணைத்துப் பெருமையைக் காட்டிப்
　　பின்மனிதர்
ஆசிப்பினேடு ஆருயிர் வாங்கும்
　　அவனியிதே. 62

அவலக் கருத்தில் அறிவைச் செலுத்தி
　　அன்னையிலாச்
சவலைக் குழந்தை நிலையில் கிடந்து
　　சாவுவரைக்
கவலைக் கருத்தில் கணக்கிட்டு நாளைக்
　　கழிப்பதுவே
குவலயம் கொண்ட குடிமக்கள் வாழ்வின்
　　கொள்கையெலாம் 63

சுள்ளியும் கோலும் எருவுடன் சேர்த்துச்
சுற்றிவைத்து
பிள்ளைதன் தலைக்குப் பின்னே நெருப்பிடப்
பெறுவரன்றி
வெள்ளிப் பணத்தால் வீட்டுள் அடுக்கும்
விராட்டிகளுக்
குள்ளிட்டு வைத்துக் கொள்ளிவைப்பார்களோ
உலகினிலே. 64

பணமாய் எழுந்து பவுனாய் விளங்கிப்
பத்தர்தொழும்
குணமாய் பறந்து குருக்களின் சமயக்
கொள்கைகளாய்
மணமாறி நின்று மதமாய் மயங்கி
மானிடரை
பிணமாய் தனக்கே உணவாய் முடித்திடும்
பின் சிரிக்கும். 65

★

முண்டி முண்டிமுன் னேறிட முழுபலம் கொண்டு
பண்டு தொட்டின் நாள்வரை பகலிர வாக
கொண்டு வந்ததேர்க் குதிரைகள் குறுக்கிடும் துன்னைபக்
கண்டு தேங்கவும் கலவரம் எய்திடும் கண்ணே! 66

நிலமி சைப்புது நியதிகள் நிலைபெற நிறுத்தி
இலகு மின்பினை எழுப்பிடு வோமென எய்க்கப்
பலநி றங்களில் பறந்திடும் கொடிபல பற்றி
அலகை போல்வரும் அவரொரு அரசியல் தலைவர். 67

முடிய சைத்திடும் மூடர்கள் நடுவில் முன்வந்து
கொடிபி டித்துதங் கொள்கைகள் பற்பல கூறி
குடிச னங்களைப் படியெனக் கொண்டுமுன் னேறும்
நடிக ராடிடும் நாடக மேஅர சியலாம். 68

குடிக ளாட்சியைக் கொடுமைக ளகன்றிடக் கொணர்வோம்
படியி லென்றுவீண் பசப்புகள் பசப்பிடும் பகட்டில்
மடிவி ரித்துமண் மக்களின் மதிப்பினைப் பெற்றுத்
தடியை ஓங்கிடும் தன்மையர் ஓர்சில தலைவர். 69

அடிமை வாழ்வினை அகற்றிடு வோமென அலறி
கொடிய யாவையும் கொன்றிடு வோமெனக்கூறி
கொடியு யர்த்திவீண் கூக்குர லிடுமவர் கொள்கை
படியை எய்த்துயர் பதவிகள் பெற்றிடும் படிக்கே. 70

தேச மென்பதும் தேசிய மென்பதும் தேசம்
பேச ஈசனால் பிறந்ததிம் மொழியெனும் பேச்சும்
நாசப் பாதையில் நானில மக்களை நடத்தும்
நீசர் தம்வழி நிலைத்திடப் புரிந்திடும் நிகழ்வே 71

ஒன்றிவ் வையகம் ஊனுடல் தாங்கிய உயிராய்
இன்றிருக்கும்நா மெண்ணில ராயினும் பேதம்
என்று மில்லவே இல்லையென் றறிந்திட வியலார்
கொன்று வீழ்த்திடக் குலமத சாதிகள் குறிப்பார் 72

செம்பொன் வீக்கிய செல்வர்கள் வறிஞரை செகுப்பார்
தெம்புளார் உடல் திரங்கிய தீனரை ஒறுப்பார்
வம்பர் தங்கள்வாய் வசையிடை வாய்மையை வதைப்பார்
அம்பு விக்குளே அரசியல் அறமிதே அறிவாய் 73

கொலை புரிந்திடும் கொடியர்கைக் கூலியைக் குறித்தவ்
விலையில் ஆசையால் வீட்டுறை யாட்டினை விற்கும்
நிலைய நீந்தும்இந் நீணில மாந்தர்கள் தலைமைக்
கலைவ தேன்நமில் அவனியில் தலைவர்க ளேது? 74

சாந்தி சாந்தியென் றோதுவார் சஞ்சல நஞ்சை
மாந்தர்க் கூட்டிவீண் மாயையே மாநில மென்று
தீந்தமிழ்ச் சொல்லில் தெய்விகத் திருக்கதை பேசி
ஆந்தைக் கூட்டமுன் அலறிய அலறல்நீ அறிவாய். 75

பித்த ராய்மரப் பிளவையின் ஆப்பினைப் பிடுங்கி
மத்தி யில்உடல் மாட்டிய மந்தியின் மயமாய்ச்
சத்த மிட்டு வீண் சண்டையில் சகத்தவர் அயரத்
தத்து வம்பல தலைவர்கள் தரணியில் தருவார். 76

சமம் சகத்துள சகலரும் சாய்வினி யில்லை
நமது நாடிது நாமெலாம் மன்னர்க ளென்று
தமது சாகசத் தன்மையில் தலைவர்களாகிச்
சமயம் வந்ததும் சனங்களை வதைப்பரோர் சாரார் 77

அலகிலா துருண் டாதவன் எதிரில் நின்றாடும்
நிலமிஃதொன் றிந்நீணில பந்திருள் நெளிவில்
நிலவு லாவிடு நீர்மலித் தண்டலை நிழலில்
உலவி வாழுநாம் ஓர் குல மானிட உயிர்தாம். 78

காட்டி லெங்கணும் காற்றினில் கவின் சிறகடித்து
பாட்டிசைத்துளம் பரவசத்தலைந்திடும் பறவை
கூட்டிலிட்டதை பூட்டிடில் குதுகலம் கொளுமோ
நாட்டில் நாட்டமேன் நானில முழுதும்நம் வீடே. 79

வேலி கட்டுவார் வேற்றுமைத் திரைபல விடுவார்
கோலிக் கல்லினால் குறுஞ்சுவர் பலகுறுக் கமைப்பார்
சோலி யற்றவர் சொல்லுமப் பிரிவினைச் சூழல்
கேலிக் கூத்தினால் கேவலப் படுவதோ கேளாய். 80

சாதியும் மதச் சாத்திரக் கோத்திரப் பிரிவும்
மேதினிக் குள்நாம் மீறிய காதலர் மெய்யில்
ஆதி நீ யுனை யண்டியுள் அன்பொடு அணையும்
பாதிநான் நமைப் பகுப்பதிப் பாரினில் ஏது. 81

நிலம் பகுப்பர்நீள் நீனிற வானினைப் பகுப்பர்
சலம் பகுப்பர்பின் சனங்களில் இனம்பல பகுப்பர்
பலம் பகுப்பர்நாம் பரவிடும் கடவுளைப் பகுப்பர்
குலம் பகுப்பர்இக் குவலய ஆட்சியைக் குறித்தே. 82

ஓய்ந்து சாம்பிய உலகுறு வழிகளை ஓட்டி
ஆய்ந்து நம்மையும் அளவிடத் தம்முளத் தாண்மை
வாய்ந்து முன்வரும் வம்பர்தம் வாய்மதப் பேச்சைத்
தேய்ந்து ஆணிகள் தெரியுமென் செருப்படி தீர்க்கும். 83

வித்தகத்திடை விளைந்ததுபோல் வெளிப்படினும்
புத்தியற்றவிப் பூதலம் அன்னதில் புகினும்
எத்தும் காலிகள் இறுதியில் ஏந்திடும் படையே
இத்தலத்தா சியலெனப் படுவதென் கண்ணே. 84

ஆற்றைக் கண்டலை யாழியை அளப்பவ ரெனவே
சோற்றைக் கொண்டுநம் சுகத்தையும் கணக்கினில் சொல்லி
வேற்று மைத்திரை விலக்கிடும் விருப்பொடு வீணில்
மாற்று யோசனை மண்ணிடை எண்ணிலர் புகல்வார். 85

உண்ணும் சோறுதான் ஊனுயிர் வாழ்வெனில் இந்த
மண்ணில் வாழ்ந்திடும் மானிடச் சாதியின் மனத்தில்
எண்ணும் நெஞ்சினில் எண்ணரு மின்னல்க ளெழுந்து
புண்ணுற் றேங்கிடப் போந்ததெக் காரணம் புகல்வாய். 86

பெரும்பொய் கூட்டிடும் பேதமை வழியினைப் பெரிதும்
விரும்பிச் செல்லுவோர் வேண்டிய படிச்செல விட்டும்
அரும்பிடும் மலர் அனையதவ் வரசிய லெனினும்
திரும்பிப் பார்ப்பதும் தீங்கதை நீங்கிவா தேவி! 87

★

## கடவுளோ?

சிலமும் சிறப்பும் தந்த
சிந்தனைச் சிற்பம் போலும்
காலமும் கணக்கும் நீத்த
கடவுளை மனிதன் போற்ற
மூலமாய் வானை எட்டி
முட்டிடும் சிகரம் தூக்கி
ஆலயம் அமைந்து நிற்கும்
அழகினை வந்திங்கே பார். 88

கல்விலோர் சிலையைக் கொள்வார்
கட்டையில் சிலுவை செய்வார்
மெல்லவோர் திசையைச் சொல்வார்
மின்னிடும் தழல்முன் செல்வார்
இல்லையே எனினும் மாந்தர்
எய்திடும் வாழ்க்கை இன்னல்
தொல்லையைச் சிறிது போக்கத்
தோற்றுமத் தெய்வம் செய்யும். 89

ஆண்டவ னென்றுன் றென்றும்
ஆருயிர் எண்ணல் போல
ஈண்டிலை எனினும் மண்ணில்
எங்குநாம் தாங்கித் தேங்க
மூண்டுள துன்பைச் சற்றே
மூடிநம் உள்ளம் துஞ்ச
வேண்டுமோர் தெய்வம். பக்தி
வேதனைச் சுமையை ஆற்றும். 90

ஆயினும் கண்ணே இந்த
ஆண்டவன் பேரைச் சொல்லி
பேயினைப் போல்நம் நெஞ்சைப்
பிடித்திடும் குருக்கள் கூட்டம்
கோயிலுள் இருந்தே யிந்தக்
குவலயம் முழுது மாளும்
நாயினும் கடைய அன்னார்
நாட்டமும் நச்சுத் தீயே. 91

கொடுப்பவன் கொடுக்க அன்னான்
கொடுப்பதை அடுத்து வாங்கி
மடுப்பவன் மடுக்க இங்கு
மத்தியில் மறித்து நின்று
தடுக்கவும் தாவும் செயலத்
தாகிடும் குருக்கள் கூட்டம்
நடுத்திரை போட்டு நின்றால்
நாமதைக் கிழித்துச் செல்வோம். 92

பொய்வந் தெருவடுக்கப்
புல்லியர்கள் கொள்ளியிடச்
செய்வதறியா துலகில்
சீரழியும் மானிடர்க்கு
மெய்வழியைக் காட்டமுனம்
மேதினியில் உண்டான
தெய்வங்கள் யாவையுமே
தீய்ந்தழிந்து போயினவே 93

பொல்லா மதக் குருமார்
போதனைகள் நாளடைவில்
செல்லாத பாதையிலே
சென்றுதமைக் கொன்றதனால்
பல்லாரும் போற்றிசெயப்
பண்டிருந்த தெய்வங்கள்
கல்லாகி விட்டனவால்
கட்டியழு தென்ன பயன்? 94

துடியாய்த் துடித்துலகத்
துன்பநிலை மாறுபட
விடியாதோ என்றேங்கி
வேதனையால் கைகூப்பும்
அடியார்கள் இன்னலெலாம்
ஆற்றி அகற்றிவிட
முடியா தென்றால் கடவுள்
முன்னிருந்து என்ன பயன்? 95

சத்தியுள தென்றாலும்
சார்ந்துநிதம் தன்னிடமே
பத்தி செயும் மாந்தர் குலப்
பாழ்நிலையைச் சீர்திருத்தச்
சித்தமிலை என்றுமேலோர்
சிற்பமென வாழ்ந்திடுமப்
புத்தியிலாத் தெய்வத்தைப்
போற்றுவதா லென்ன பயன்? 96

எல்லா விதங்களிலும்
இன்னல்கழிந் தின்பருள
வல்லான் கடவுளெனில்
வாதையுறும் மானிடர்தம்
பொல்லாங்கின் தீயவழிப்
போக்கையெலாம் மாற்றாமல்
கல்லாக நிற்குமதைக்
கைதொழுது என்னபயன்? 97

இரும்பான நெஞ்சினிலே
இன்பவெறி கொண்டெதற்கும்
திரும்பாமல் மாநிலத்துத்
தீங்கை யெலாம் மாற்றிவிட
விரும்பாமல் மேலவனால்
விண்ணுலவும் மானிடர்க்குப்
பொருந்தாத தெய்வமதைப்
போற்றுவதா லென்னபயன்? 98

இருந்தால் நமக்கென்ன
இல்லையெனில் தானென்ன
பொருந்தாத பேச்சுகளால்
புந்தியை வீணாக்குவதேன்
விருந்தாக மண்ணுலக
வீட்டுக்கு வந்தவர்நாம்
வருந்தாமல் சற்றிருந்து
வந்தபடி செல்வோமே. 99

நாளை நடப்புகளில்
நம்பிக்கை கொண்டிருந்த
வேளைச் சுகத்தினையும்
வீணாக விட்டுவிட்டு
கோளைக் கணக்கிடலும்
கோயில்கள் சுற்றுதலும்
மூளை குழம்பியவர்
மூடவழி தானடியோ! 100

விதவிதமாய்த் தோன்றிடினும்
வெவ்வேறாய்ப் பேசிடினும்
மதங்களெலாம் மதிமயக்கும்
மதுக் கலசம்தான். இவைகள்
எதனாலும் பயனில்லை.
என்னருகே வா நமது
இதழ்கூட்டும் இன்பத்திற்
கிணையேதும் இல்லையடி. 101

இழுக்குறு மதத்தைவிட் டிங்கு வந்துபார் !
அழுக்கடைந் தற்றைநாள் ஆன்ற நம்மவர்
வழுக்கிமுன் வீழ்ந்தவல் வழக்கம் யாவையும்
ஒழுக்கமென் றுரைத்தவற் றிழுக்கும் பேயிது. 102

நீதியை ஓதிடும் நேர்மை பேசிடும்
வாதியும் எதிரியும் வழக்கு மாக்கிடும்
ஓதிடும் சட்டமும் ஒழுங்கும் நேர்மையும்
ஆதியின் பேரிலே அவல மாகவே. 103

பார்திருத் திடத்தகு பலமுள் ளார்கள்போல்
சீர்திருத்தம்பல செப்பும் கூட்டமே
நேர்வழி தடுத்திதோ நிற்கு மன்னதின்
பேர்பெருங் காதலர் பிரேமை கொண்டவர். 104

அண்டையி லுள்ளவர் அஞ்சி டும்படி
கண்டனம் செய்தனர் கடிந்து ஏசினர்
தண்டனை அளித்தனர் தலையைச் சீவினர்
பண்டிருந் தாயினும் பழிகள் நின்றவோ ? 105

திட்டரை விடுத்துயர் தூய மாந்தரைக்
கட்டிய கயிற்றொடு கைதி யாக்கியோர்
கொட்டடிக் குள்ளிடக் குதுகலித்திடும்
சட்டமெய் யறத்தினை எட்டிக் காணவோ ? 106

ஆற்றிடு மனைத்து மாராய்ச்சிக் கல்வினில்
மாற்றுரைத் தறிந்ததன் மதிப்பைக் கூறிடும்
வேற்றுமை விதைகளை விதைத்த தன்றிவீண்
எற்றமும் தாழ்வுமற் றிடப்பு ரிந்ததோ? 107

போதனை செய்பவர் புகன்ற வாய்மைகள்
பேதம டைந்துவீண் பித்தென் றாகிட
வாதமும் பதிலுமாய் வழக்கு மூண்டதின்
வேதனையே நெறி விளைத்த நீதியாம். 108

வாதியும் எதிரியும் வாய்த்து டுக்கினால்
பேதிக்க அன்னவர் பின்னின் றாடலே
நீதிக்கு மண்ணிலே நெறியென் றாலயம்
போதிக்கும் வலிமையிப் போதி லேதடா! 109

வெட்டியி லிங்கு வேதனைகளைக்
கட்டிய கரத்தொடு கதறுவோர்கள்பால்
விட்டுவிட் டப்புறம் விலகிச் சீக்கிரம்
எட்டியிப் பாதையில் என்பின் னோடிவா! 110

★

## மலை புரட்ட எலி

விண்ணீலப் பாயினிழை
    விண்டோர் புறக்கிழியின்
தண்ணீரில் வாழ்ந்திடுமீன்
    தாவியதைத் தைத்திடவோ
எண்ணாத எண்ணமெலாம்
    எண்ணுதலால் வீணில் மனம்
புண்ணாவ தல்லாதிம்
    மண்ணா திருத்திவிடும். 111

நித்தம் துயரமெதோ
    நெஞ்சை அலைத்திடவும்
கத்தும் கடலலையின்
    கண்ணீர் துடைத்திடவோ
சித்தம் செலுத்துகிறாய்
    சிந்தனையைப் பாழாக்கும்
பித்தே உன் தாய்நாட்டுப்
    பத்தியினா லென்னாகும். 112

பள்ளத்துப் பாதையிலே
    பாய்ந்துசெலும் இவ்வுலக
வெள்ளத்துள் ஓர் துளி நீ
    வீணே யதற் கெதிராய்த்
துள்ளிக் குதிப்பது வீண்
    துன்பந்தான் உன்வழியே
வெள்ளம் திரும்புமென
    வீண் கனவு காணாதே. 113

எதுயிர்த மண்ணுலகில்
எக்கேடு கெட்டாலும்
அதுபற்றி வீண்கவலை
அடையாதே வாழ்க்கையெனும்
புதுமலரி லேமனிதப்
பொன்வண்டே! இன்பமெனும்
மதுவுண்டே உண்டோடு
மற்றெதையும் பாராதே. 114

★

## சாவின்முன் தேவ சுகம்

நிலையில்லை இவ்வாழ்வு
நிச்சயமன் றிவ்வுடலம்
அலைபோன்ற ஆசையெலாம்
ஆடியபின் ஒய்வனவே
மலையாதே எனினுமதோ
மரணமெனும் என்றென்றும்
நிலையான சுகமுளது
நிம்மதியங் கேபெறலாம் 115

சாகப் பிறந்தவர்தான்
சத்தியமாய் என்றாலும்
சோகத்தால் இன்படையும்
தாகத்தால் மாள்வானேன்
தேகம் பிணமாகிப்
போகுமுனம் இவ்வுலகப்
போகமெலாம் துய்த்தப்பின்
போவோமே கண்மணியே! 116

இன்றுளவிச் சுகமேனும்
இறுதிவரை கிட்டுமெனில்
சென்றதனை எண்ணாது
சிலகாலம் வாழ்ந்திடலாம்
அன்றெனிலோ தங்குவது
ஆவசியம் மரணமெனும்
என்றுமிரந் தரயின்பம்
எய்துமிடம் சேர்வோமே! 117

விண்ணுயர்த் தாவியதில்
வீதிவலஞ் செய்துவரும்
எண்ணரிய மீன்களுடன்
இன்பவுலாப் போந்துவர
எண்ணி நிதம் தாவிடினும்
எட்டாது மின் மினிகள்
மண்ணிடையே வாழ்ந்திருந்து
மாள்வதற்கே வந்தவை காண். 118

நினைத்தால் உருச்செய்து
நீண்டுவளர்ந் துள்ளதொரு
பிணத்தார் வனைந்துளதிப்
பிழையுடல் ஆனாலும்
குணத்தால் உணர்வூட்டி
குறையை நிறைவாக்கி
மணத்தாலிம் மாநிலத்தில்
மகிழ்வுறுவோம் இங்கே வா! 119

சோம்பி யுயிர் வாழ்ந்து
சுடு காட்டை நோக்கிப் பின்
போம் பிணங்கள் எத்தனையோ ?
போம் பிணத்தைச் சுட்டுவரும்
சாம் பிணங்கள் எத்தனையோ ?
சாலைவழி கண்டின்னும்
நாம் பிணங்கள் என்றாலேன்
நகைக்கின்றார் நம்மவர்கள் 120

தேயாமல் வளர்ந்தபிறை
    தினந்தோறும் தென்படுமோ?
ஓயாமல் காலத்தேர்
    ஓடுவதன் மேலிருப்போர்
சாயாமல் என் செய்வார்?
    சாவழைக்க நம்முடலம்
தீயால் கருகுமுனம்
    தேவசுகம் காண்போம் வா! 121

உனக்காக நீ என்னை
    உள்ளன்பால் காதலித்தாய்
எனக்காக நானுமுனை
    இச்சையுடன் நச்சுகிறேன்
மனக்கவலை மாற்றுதற்கு
    மண்ணிடையே காமுற்று
தனக்காகத் தானிணையும்
    தனிமைசுகம் கண்டவர் நாம். 122

★

மணத்தைச் சுமந்தென் மதியைச் சுமந்தென்
　　மாண்புடைய
குணத்தைச் சுமந்தென் கோலஞ் சுமந்தென்
　　குவலயத்தே
நிணத்தைச் சுமந்து நிலையற்று சின்னாள்
　　நின்றழியும்
பிணத்தைச் சுமந்து பிணிகொண்ட வாழ்க்கைப்
　　பெருமையிதே. 123

கட்டாக வந்து ககனத்தி லெங்கும்
　　காரிருளில்
ஒட்டா துலாவி உல்லாச மாக
　　ஒளிக்கதிரோன்
பட்டால் மறைந்து படுமீன்கள் செய்கை
　　பார்த்திருந்தும்
எட்டாத எண்ணிக் கொட்டாவி விட்டிங்
　　கேக்கிடவோ! 124

பிறப்புண்டு என்ற பின்னே நிலத்தில்
　　பிறந்தவைகள்
சிறப்புண்டு ஏனே சீருண்டு வாழ்வு
　　செழிப்பதனால்
மறப்புண்டு மிக்க மாண்போடு இன்பில்
　　மகிழ்ந்திடினும்
இறப்புண்டு என்றும் இறப்புண்டு சீவர்க்கு
　　இறுதியிதே. 125

கொஞ்சிக் குலாவிக் கூடிச் சுகித்திடும்
குழைவுடனே
தஞ்சம் புகுந்து தனதாக எண்ணி
தாங்கியவை
அஞ்சிட்ட போது துணையற்ற தென்ற
துன்பிடையே
நெஞ்சம் இறப்பின் நினைவைக் கிளர்த்தி
நிகழ்ந்திடுமே. 126

எங்கே இருந்தோம் எதனால் பிறந்தோம்
இவ்வுலகில்
தங்கிப் பின் சாவில் தனியே பிரிந்து
தம்முயிர்போய்
மங்கிப்பின் எங்கு மறைவோம் எனுமிம்
மர்மமெலாம்
இங்கே நமக்கு எடுத்தோத வல்லார்
எவருமிலை. 127

பிறப்பன்னை கண்ட பிணியால் விளங்கும்
பிறந்தவுயிர்
சிறப்புண்டு டுத்த செலவால் விளங்கும்
சிறந்ததெலாம்
அறப்புண்டு சுற்றம் துக்கத்தி லாழ்த்
அஞ்சிடுவார்
இறப்புண்ட பின்பு என்னாகுமோ
தெவரறிவார்! 128

உடலோடணைந்த உயிர்கொண்ட வாழ்வு
ஒருசில நாள்
திடமோ டிருந்து திரும்பக் கொடுத்துத்
தீர்த்துவிடக்
கடனாக முன்னர் காலம் அளித்த
கடமையிதை
உடமை எனக்கொண் டுலகத்துலாவ
ஒருப்படுமோ ? 129

சூழ்கின்ற செல்வம் சுற்றிக் கிடக்கச்
சுகித்திடினும்
ஆழ்கின்ற இன்புக் கழகான பேரை
அணைத்திடினும்
தாழ்கின்ற தாயித் தாரணி முன்னே
தாழ்ந்திடினும்
வாழ்கின்ற போதே மாள்கின்ற சிவ
வாழ்க்கையிதே. 130

பத்தாம் பசலியினர்
பண்டைப் பழங்கதையின்
வித்தாரம் பேசுவதில்
வீண்பொழுது போக்குவதோ ?
உத்தாரம் பெற்றுடலை
உயிர்பிரிந்து சென்றால்பின்
செத்தார் பிறப்பதில்லை
சிந்தித்துப் பாரிதனை. 131

மாந்தர் குலம் தன்னெதிரே
மண்டியிட்டுக் கைகூப்ப
வேந்தாய் அரசாண்ட
வீரனது மாளிகையில்
ஆந்தைபல கூடியதோ
ஆனந்தமா யமர்ந்து
சாந்திக்குப் பாட்டிசைக்கும்
சத்தம் ஒலிப்பதுகேள். 182

பரியேறும் வாள் மறவர்ப்
படைகள் பல பவனிவர
கரிகாலன் அரசாண்ட
காவிரிப்பூம் பட்டினமோர்
தரிசாய்க் கிடக்கிறது
தனிக்காட்டுப் பேரரசாய்
நரியாளும் இழிநிலைக்கின்
நாளாகி விட்டதுபார். 183

வித்தகர்கள் வருகின்றார்
வீணர்களும் வருகின்றார்
பத்தினிமார் செல்கின்றார்
பரத்தையரும் செல்கின்றார்
சத்தமிட்டே ஊடாடி
சற்றிருந்து மீண்டுவிடும்
இத்தரணிச் சந்தையிலே
எவ்வளவோ பேர் வருவார். 184

எத்தனையோ பேர் நிதமும்
இவ்வுலகில் பிறக்கின்றார்
எத்தனையோ பேர் நிதமும்
இவ்வுலகில் இறக்கின்றார்
இத்தனைக்குள் நாமிருவர்
இன்னும் நமக்கிவ் வாழ்வு
எத்தனைநா ளென்றறியோம்
இதற்குளின் புறுவோம் வா! 135

★

# அவர்கள் போகட்டும்

யாதும் அறிந்தவர்போல்
யாமெமதென் றேதேதோ
வாதும் வழக்குகளும்
வாய்கிழியப் பேசுதற்கு
ஏதும அறியேன்நான்
இவ்வுலக வாழ்க்கையிலே
போதும் அதற்கில்லை
போவோம் வா கண்மணியே. 136

தத்துவங்களைச் சமய
தாசர்களே தேடட்டும்
புத்தகங்களை யேட்டுப்
பூச்சிகளை நாடட்டும்
வித்தகத்தை விஞ்ஞான
வீணர்களே கூடட்டும்
இத்தனையும் விட்டுசுகம்
எங்குளதென் றாராய்வோம். 137

உண்ணப் பொசிப்பில்லார்
உபவாசம் செய்யட்டும்
கண்ணில் ரசிப்பில்லார்
காடுகளுக் கேகட்டும்
பெண்ணே! மனதாலிப்
பீடைகளை இப்பொழுதில்
எண்ணுவதும் பாவமடி.
இன்புறுவோம் இங்கேவா! 138

பெண்ணின்பம் கண்டறியாப்
    பேடியர்கள் ஏசிடுவார்
கண்ணிருந்தும் காணாதோர்
    காவியுடை போர்த்திடுவார்
விண்ணோக்கிக் கைகூப்பும்
    வீணர்மனம் கூசிடுவார்
மண்ணுலகின் மாசவரை
    மதியாதே போவோம் வா. 139

★

## நாகங்கள், ஜாக்கிரதை !

உலகுடன் தோன்றி ஊழியில் அனைத்தும்
ஒழிந்திடும் இறுதியின் வரையில்
இலகிடப் பிறந்த இன்னுயிர் எனினும்
இழிவழிப் பட்டு வீணாகக்
கலகமே செய்யும் கருத்துடன் அவமே
கதைகதைத் தலைந்திடும் கொடிய
அலகையின் கூட்டம் அன்னதால் நமக்கிங்
காவது எதுமே யில்லை. 140

மானிடர்தமை ஆம்! மாடுகள் போல
மாண்பிலா வீண்புலை வழியில்
கூனிடும் நெஞ்சம் குறுகிடக் கூம்பிக்
குற்றமே குணமென அறிவு
சூனியப்பட்டுச் சூழ்ச்சியில் வீழ்ந்து
சோர்வுடன் சாவினில் செல்லும்
நானிலத் துறையும் மானிடர் நிலையை
நன்குநாம் உணர்ந்திடப்பெற்றோம். 141

ஈனர்கள் கூறும் இழிமொழி யெதையும்
இறைசொலும் மறையென யேற்று
ஞானம் முன், சொன்ன வானவர் தம்மை
நலிவுறச் செய்வதில் தமது
மானமும் மதியும் மறந்தலைந் துழலும்
மண்ணுறு மானிடப் புழுக்கள்
நானதை அறிவேன் நஞ்சுகொண்டுலவும்
நாகமே போன்றதக் கூட்டம். 142

நல்லவர் தம்மைக் கொல்லமுன் வருவார்
நன்றியை அன்றோடு மறப்பார்
புல்லிய தொழில்கள் பல்வகை பயின்று
பொய்மையில் புந்தியைப்போக்கி
அல்லவைதயெல்லாம் அன்புடனேற்று
அசடரை அனைத்திலு மிக்க
வல்லவ ரென்று வாய்ப்பறை அடிப்பார்
வையகப் பாங்கிதை அறிந்தோம். 143

கலைபல வல்லார் நிலைபெறச் செய்த
காவியம் ஓவியம் யாவும்
இலைவுற இரக்கம் கொஞ்சமு மின்றிக்
கொன்றவை பொன்றிய பின்னர்
விலையிலாக் கலைகள் வீழ்ந்தவவ் விடத்தில்
விருதுகள் பற்பல கூறி
சிலைகளை சமைத்துச் சிந்துகள் பாடிச்
செம்மலர் தூவிக்கை தொழுவார். 144

எழிலினை வடித்தார் இன்புடன் காட்டி
இங்கில மக்களுக் காக
பொழியு முள் ளன்பில் புதுப்புது வகையில்
புகட்டிட வருங்கலை புலவோர்
வழியி லிஞ்ஞான்றும் வழங்கிடு மவர்தம்
வானுயர் கலைகளுக் காக
விழிவிடும் நீரும் பழிச்சொலு மல்லால்
வேறெதை மண்ணிடை கண்டார். 145

ஊரினை விட்டே ஓட்டிடக் காட்டுக்
கோடினோர் எத்தனை பேரோ?
காரிருள் சூழ்ந்த வெஞ்சிறைப் பட்டுக்
கதறினோர் எத்தனை பேரோ?
கூரிய வாளால் குத்தவும் ஆகம்
குலைந்தவர் எத்தனை பேரோ?
எரியும் குளமும் ஆறுடன் கடலும்
ஏற்றதும் எத்தனை பேரோ? 146

மாசிலாச் சேசு மாமுனி சிலுவை
மத்தியில் மாண்டவம் மாண்பும்
வீசிய படைகள் வித்தகன் லல்லே
வெருட்டிமுன் னோட்டிய விதமும்
ஏசிமுன் சாக்ர டீசினுக் குணவில்
இட்டவன் னஞ்சினதேல்பும்
பேசிடும் மாந்தர் பெரியவர்க் களித்த
பெருமையின் சால்பினைப் பெரிதும். 147

பட்டினத் தடிகட் கிட்டவெவ் விடமும்
பாவலன் கம்பனின் பசியும்
வெட்டவும் எட்டி வீழ்ந்துருண் டிட்ட
வித்தகன் யோவனின் தலையும்
கட்டிட இறுக்கிக் கைகளைப் பிணித்த
காந்தியின் கையுறு விலங்கும்
மட்டிலா அன்பில் மானுடம் உயர்வை
மதித்தவக் கதைகளைக் கூறும். 148

கண்ணினைப் பிடுங்கிக் கையினில் கொடுத்துக்
கசையடி கொடுத்ததோர் காலம்
புண்ணிடை வேலைப் புகுத்தியுட் தசையை
பூவெனப் பிய்த்த தோர் காலம்
உண்ண வூணென்றோர் ஊனுடல் செகுத்து
ஊட்டியுண் பித்ததோர் காலம்
மண்ணகம் நல்லார் மாண்பினைப்போற்றி
மதித்ததன் பாங்கிதை அறிவோம். 149

நானிலப் பரப்பில் நீர்நிலை தனிலே
நாசியைத் துளைத்திட நாறும்
ஊனிடை வளரும் மீனினைப் பிடித்து
உப்புடன் சேர்த்துலர்த்திட்டு
மானிடத் தெருவின் மத்தியில் கொணர்ந்தால்
மக்கள் முன் விற்கலாம் ஆனால்
வானிடை ஒளிரும் மீனினை விற்றால்
வாங்கிட வல்லரோ அவர்கள்? 150

சிலைகளின் முன்னே சிந்தனை யின்றிச்
சிரத்தினைத் தாழ்த்திக் கை கூப்பி
நிலையிலா தாடும் நெஞ்சுடன் ஓடும்
நீணில மானிடத் தெதிரே
விலையிலா நமது வித்தக நெறியை
விளக்கிடில் எப்பயன் விளையும்
அலைவதேன் இந்த அற்பரை விட்டு
அப்புறம் செல்லுவோம் அன்பே! 151

ஊனமுற்ற உளத்தவர்
ஓடி ஓடிக் களைத்திடும்
ஈனப் போக்கிதை விட்டுவா
இணையிலாத இயற்கையின்
ஞானப் பாதையில் செல்லுவோம்
ஞாலமுன்பு நயந்திதோ
வானமும் பணிகின்றது
வந்திவ் விந்தையைப் பாரடி. 152

தன்னில் தானே யுதித்தவள்—
தானென்றேபல வானவள்
இன்னிலத்தினும் மூத்தவள்
எனினும் என்று மிளையவள்
முன்னும் பின்னு மிலாதவள்
மோக மோகன சுந்தரி
கன்னியா மிவ்வியற்கைதான்
கால தேவனின் காதலி. 153

வண்ண மோட்டைசந் தாடிடும்
வஞ்சிமார் பலர் கையிலே
கிண்ணியில் புதுக் கள்ளுடன்
கிட்டிவந்து சுவைத்திட
பண்ணிசைத் துலாவிடும்
பாணனாகிய வண்டினைக்
கண்ணடித் தழைக்கின்றனள்
கண்ணே வந்திதைப் பாரடி 154

கூடிக் கொஞ்சிக் குலாவிடக்
        கூதலென்றதன் காதலி
தேடி வந்து கலந்திட
        தேகம் புல்லரிப் புற்றதால்
வாடி விட்டதன் மெய்யிலோர்
        வலி பிறக்கவும் வண்மையில்
ஆடித் தங்கிளைத் தோகையோ
        டால மாமயில் நிற்றல்பார் ! 155

காரிருள் முகிற் காட்டிலே
        கையில் மின்னிலை வேலுடன்
வாரி முத்தை வழங்கிமண்
        வாழ்வி னின்மை வளர்த்திடக்
கோரிவந்து கூத் தாடிடும்
        கோமளாங்கியைப் பாரிதோ
மாரியென்னுமிந் நாரியும்
        மாநிலத்துநம் தோழிநான். 156

காலை வானக் கதவினைக்
        கால தேவன் திறக்கவும்
சோலை மாமலர்ச் சொக்கெழில்
        சூடிக் கீட்டிசை மேட்டிலோர்
மூலையில்குளிர் முத்தொளி
        முறுவல் காட்டி வெளிவரும்
வாலை மோகினியா யாமுஷை
        வையத்தி நம் சேடிதான். 157

அந்தாத் தெரு மத்தியில்
ஆரு மஞ்ச வுலாவரும்
செந்தழல் வளர் தேவனின்
சிந்தையுந்தனைக் காணவும்
விந்தையாகச் சுழன்றுதன்
வேட்கையில் விழச் செய்திடும்
அந்தி யென்னுமோர் சுந்தரி
அவளும் நம்மருந் தோழிதான். 158

உருளு கின்றயிவ் வையகம்
ஊமையாக உறங்கிட
மருளு கின்ற மயக்குடன்
மையிருள் வர யாவையும்
இருள் வலைக்கு ளிருக்கையில்
எழில் செய் இன்பொளி எங்கணும்
அருளவந் துலாவிடும்
அம் புலியும் நம் பாங்கியே. 156

நிலையி லாதயிவ் வாழ்விலே
நிற்க வென்று பிறந்துயில்
அலையு மானிடச் சாதியின்
அறிவு முற்று மயங்கிட
மலைவு கூட்டிடு மின்னல்கள்
மத்தியில் மனப் புண்ணிடை
கலைம ருந்திட முன்வரும்
கவிகள் யாரும்நம் தோழர்தான். 160

ஆத்திகர் மனத்தாழமாய்
அன்னவர் நிலை பின்னிடும்
நாத்திகர்க் கறிவெல் லையாய்
நானிலத்துறு மானிடர்
சாத்திரங்களின் சூழலில்
சாந்த ஞான சபைதனில்
கூத்திடும் நட ராஜனும்
குவலயத்து நம் நண்பனே! 161

அல்லதாக லமைந்தது
அகில முற்றிலு முள்ளது
எல்லை மீறிய சித்தது
ஏது மொன்று மிலாதது
இல்லை யாமது வாயினும்
இன்னிலத் துறு மானிடர்
தொல்லை நீங்கத் துதித்திடும்
தூய வொன்றும்நம் தோழனே. 162

கண்ணி ரண்டும் மயங்கிட
கைகள் கூப்பி வணங்கிட
மண்ணை மூடி கவிந்ததாய்
மாய மோகன லாகிரி
எண்ணுவார் மனத் தூட்டிடும்
ஈடிலாத மதுக் கிண்ணமாய்
வண்ண மாயிரம் காட்டிடும்
வானத் தோழியைப் பாரடி! 163

எத்தி வெண்மணல் மேட்டினால்
    இட்ட தங்கரை முட்டவும்
நித்தம் வந்துவின் மேடையில்
    நின்றே ஆடும் நிலாவிடம்
சித்தம் ஓட வெம் மையலால்
    சிந்தை சுற்றிச் சுழன்றிட
கத்தியாடும் கருங்கடல்
    காம நாடகம் பாரிதோ! 164

ஆவி சோர்ந்து நடுங்கிட
    ஆவல் தேங்கப் பின் வாங்கிடும்
தேவி வா சுவைத் தேனினும்
    தீஞ்சுவை தரும் தெய்விகப்
பாவினங்களும் பண்டிதர்
    பண்டில் ஆக்க அழிவிலாக்
காவியங்களும் பற்பல
    காசினியில் நம் பானுள. 165

அற்ப மானிடச் சிலர்நாம்
    ஆசையின் வழி ஏகிட
முற்ப டும்பொழு தில்துயர்
    முட்க ளேறத் துடித்திடும்.
சொற்ப நாட்படும் வாழ்விது
    சொற்பனம் நிகராயினும்
கற்பனையெனும் தெய்விகக்
    கட்சுவை யதை மாற்றிடும். 166

# வீடுடையார்

இன்னலின் தடையைத் தாண்டி
　　இந்நில வுலகத் துள்ள
இன்னவை அனைத்தும் விட்டு
　　இன்னுமுன் னேறிச் சென்றால்
தன்னிரு கரமும் நீட்டித்
　　தாவி முன் வந்து சாவுக்
கன்னிகை சாந்தி கூட்டக்
　　கனிவுடன் அழைத்து நிற்பாள். 167

மதுவினும் வெறியை யூட்டி
　　மானுடம் மயங்க வாழ்வின்
புதுமையில் பழமை யாடும்
　　பூரணத் தெரியை மூட்டி
அதுவிதென் றறிவின் ஆழம்
　　அளக்கரும் நிலையைக் காட்டும்
பொதுமகள் சாவுத் தேவிப்
　　புன்னகை யமைதி கூட்டும். 168

நினைத்திடும் நெஞ்சில் பாய்ந்து
　　நிலமெலாம் பாழ்த்துச் சாம்ப
கனைத்தெழுந் தோங்கி யாவும்
　　கையுறப் பற்றி ஆட்டச்
சினைத்தெழும் மனித வாழ்வின்
　　சிறுமைகள் முழுதும் மாள
அனைத்தையும் முடித்துச் சாந்தம்
　　அளிப்பது மரணம் கண்டாய். 169

கற்பனை கடந்த வீடு
கவிதையின் எல்லைக்கோடு
புற்புதச் சீவ வாழ்க்கைப்
புள்ளுறை சாந்தக் கூடு
விற்பனர் அறிவின் எல்லை
விளிம்பினில் விளங்கும் மேடு
அற்புதம் அதையென் னாவால்
அறிவறிந் துரைக்கப் போமோ? 170

மன்னிய உலக மீதில்
மானிட வாழ்வில் கண்ட
இன்னலின் குறைகள் ஏதும்
என்றுமே இல்லா தாகி
முன்னுடன் பின்னு மற்று
முதலொரு முடிவாய் நிற்கும்
கன்னிகை சாவுத் தேவிக்
கவலைகள் கரையச் செய்வாள். 171

★

## பேதம்

இன்னல்க ளாயிரம் பின்னி மறித்திட
ஏங்கி நடந்து மடிந்தொழியும்
இன்னில மானிடர் ஏகிய பாதையை
ஈனவழியென் றொதுக்கிவிட்டு
தன்னுளப் போக்கினில் தாவிமுன் னேறிப்பின்
தன்னந் தனிமையைக் கண்டறிந்து
அன்னதில் கூடியணைந்ததிலே பிற
அத்தனையுந் தகர்த் தின்புறுவோம். 172

சட்டங்கள் கூட்டிய கட்டுகள் யாவையும்
சட்ட சடாரெனப் பட்டுவிழப்
பட்டம் பதவிப்பகுப்புகள் முற்றிலும்
பாழ்பட்டு ஆழப் புதைந்துவிட
எட்டி யணைத்தையும் முட்டி யளக்கமுன்
ஏறிடு மிச்சைக ளாறிவிட
மெட்டி குலுங்கிட ஓட்டி நடந்திந்த
மேதினிப் பாதைவிட் டென்னுடன் வா! 173

ஞானம் பயின்றவர் மோனத் திருந்தவர்
ஞாயம் புகன்றவர் யாவருமே
ஈனர்க ளாயினர் ஊன வழியதில்
ஏகிய யாவரும் ஏங்குகிறார்
ஆன கலையுமா ராய்ச்சிமுடிவும்வீ
ணாகச் சுழன்று திரியுதடி
போனது போகட்டும் ஆனது ஆகட்டும்
புத்தியின் பாதையில் போவமடி. 174

மண்ணின் அழகுகள் எண்ணற்றிருந்துமம்
மாண்பினைக் கண்டு மனமகிழ
கண்ணிரண் டோடு கருத்திருந்தும் பெருங்
காட்டைக் கடக்க நடப்பவர்போல்
புண்ணுற்ற நெஞ்சம் பொம்மிப் பொருமிடப்
போந்தலை வார்கள்தம் போக்கினிலே
நண்ணப் படாதடி பெண்ணமுதே மனம்
நாடிய இன்பினைக் கூடிடுவோம் 175

முப்பதி னாயிரம் நாட்களுக் குள்யாவும்
முற்றி முடிவை யடைந்துவிடும்
கப்பலி லேறியிங் கிப்படிச் செல்லுநாம்
கையில் கிடைத்ததை நையவிட்டு
குப்பையைக் கிண்டிடுங் கோழியைப் போல்பல
கொள்கையின் கூற்றினைக் கொண்டுவந்து
இப்படி அப்படி என்றுவீண் வாதுகள்
எதெதோ கூறிக் குழப்புவதோ ? 176

மண்ணிலிருந் தெவர் விண்ணை யடைந்ததன்
மாண்பினைக் கண்டுவந் திங்குரைத்தார் ?
கண்ணறி யாவெளிக் குண்ணிறைந் ததெனக்
கற்பனை செய்யும் களிப் பதிலும்
நண்ணிக் கலந்திட எண்ண இணைந்திடும்
நம்முள் காமச் சுகம்சிறிதோ ?
உண்ணும் இதழ்ச்சுவை ஊறல் மதுவில்நம்
உள்ளத் துயர்களை ஓட்டுவம் வா ! 177

சீரும் சிறப்பும் நல் செல்வப் பரப்பும் நாம்
சீயென் றேதுக்கி விட்டோமதனால்
யாரும் நிகரில்லை யாதும் எதிரில்லை
யாவுமிம் மண்ணிடை நம்முடைத்தே
ஊரும் இருக்கையும் பேரு மெதற்கிங்கே
உற்றதெலாம் நமக் கூற்றனவே
பேரும் பிறபலர் பேசும் பிரிவினைப்
பேதங் கடந்தவர் நாமடியோ! 178

மற்றவர் பற்றுக்க ளற்ற தனிமையில்
உற்றவிச் சோலையே விண்ணுலகம்
உற்றநம் நெஞ்சகம் முற்றிய காதலில்
ஒன்றிக் கலப்பதே முக்திநிலை
சிற்றறி வெல்லையில் சேர்ந்து பறக்குநம்
சிந்தனைப் புள்ளிசையே கவிதை
குற்றங் கடந்த நாம் கூடிச் சுவைத்திடும்
கொவ்வை யிதழ்ச் சுவையே யமுதம். 179

ஞாலத்து வாழ்க்கை ரகசிய முற்றுமெய்ஞ்
ஞானத்தில் கண்டு தெளிந்துவிட்டோம்
பாலமிட்டுப் பழஞ் சீலமுடன் புதுப்
பண்பை இணைத்து வழியமைத்தோம்
காலத்தின் எல்லையில் காமக் களிப்பினில்
கால்களைத் தூக்கி நடம்புரிந்தோம்
மூலத்து மேட்டினில் முத்தமிட்ட சுவை
மூரலை மாற்றி உயர்ந்துவிட்டோம் 180

கண்ணின் மினுக்கிலோ கன்னச் சுழிப்பிலோ
கள்ளிதழ் கூடும் இணைப்பினிலோ
நண்ணும் துடிப்பிலோ நாடும் நடப்பிலோ
நத்திடும் கையின் அணைப்பினிலோ
எண்ணக் கலப்பிலோ இச்சை வெடிப்பிலோ
இன்னலை நெஞ்சம் மறப்பதிலோ
மண்ணிடைக் காதலில் மாந்தச் சுகமெழும்
மர்ம நிலையதைக் கண்டவரார்? 181

காமனே நம்குரு காதலே நம்மதம்
கற்பனை யற்புதம் காட்டிடும் நின்
தாமரைச் செவ்விதழ் தாவிச் சுவைக்கையில்
தான்பெறு மூறலே விண்ணமுதம்
கோமளமே மணங் கொள்ளுமிப் போதில் நாம்
கூறிடுஞ் சொற்களே தெய்வமறை
தாமதஞ் செய்வதே பாவமிம் மெய்ந்நெறி
தாரணி யோர்கள் அறிவறியார். 182

இன்னெழில் ஓமம் வளர்த்திடுவோம் வாழ்வின்
இன்ப மதுவைச் சுவைத்திடுவோம்
இன்னலைத் தீய்த்துக் கருக்கிடுவோமிச்சை
எல்லை யில் நின்று நடம்புரிவோம்
முன்னுடன் பின்னும் மறந்திடுவோம் ஞான
மூலத்து மாளிகை யுட்புகுவோம்
பின்ன தெலாமதில் பீறிடும் வாரியில்
பேரற்றழியக் கரைத்திடுவோம். 183

வருந்தி வலுவிலிவ் வையக மத்தியில்
வந்து பலவிதமாய்ப்
பொருந்து மொழிகளில் போதனை செய்தபின்
போயழி வில் கலந்தபாதனை செய்தபின்
பெருந் தலைவர்த்தொகை பெற்றதெலாம் வெறும்
பேரன்றி உண்மையில் சீர்
திருந்தியதா ? இதைத் தேர்ந்து தெளிந்ததில்
தெய்விக மெய்தி விட்டோம். 184

காலைப் பொழுதினில் காவிரி யாற்றங்
கரையினி லுற்றதனைச
சோலை கிடைக்க வச்சொர்க்க சுகத்தினிச்
சோம்பலில் விட்டுவிட்டு
பாலை வனாந்தரப் பாழினில் தீயெனப்
பற்றிடும் வெய்யலிலே
வேலை யில் லாமலே வெற்றுக் கலைந்துவீண்
வேதனை தேடுவதா? 185

தத்துவம் பேசவும் கத்திக் குதிக்கவும்
தர்மம் புரிந்திடவும்
பத்தியில் சொக்கவும் எத்திப் பிழைக்கவும்
பாரில் உழன்றதன்பின்
செத்துக் கிடக்கவுமோயிந்த மண்ணினில்
சென்ம மெடுத்தனம் நாம்
இத்தனையுங்கெடச் சித்த மகிழ்ச்சியே
இங்குளம் நோக்கமடி 186

ஏங்கியிம் மண்ணிலே தேங்கிக் கிடப்பது
ஈன வழியதனால்
வாங்கிடு மட்டிலும் வாழ்வின் சுகத்தினை
வாங்கிச் சுவைத்திடுவோம்
தீங்குகள் தூங்கிடத் தேவைகள் நீங்கிட
தேசமெல்லாம் நமதாய்
தாங்கிய யாதொரு தன்னந் தனிமையில்
தாவித் திரிந்திடுவோம். 187

நாடு மொழி நிற நானிலப் பேதமை
நாற்ற மறந்து விட்டோம்
தேடு பெருஞ்சுகத் தேறல் இருப்பிடத்
தேக்க மறிந்துவிட்டோம்
ஏடுகள் முன்பல தேடி யலுப்புறும்
இச்சை முடிவறிந்தோம்
பாடுங் கருங்குயில் ஜோடி யெனயிணைந்
தாடிக் களிப்புறுவோம். 188

கங்கு கரையற்றுத் தங்கு தடையின்றிக்
காசினி மேல் நடக்கப்
பொங்கித் ததும்பிடும் புத்தம் புதுப்புனல்
பொன்னியைப் போலெழுந்தோம்
இங்கு நமக்கினி ஏதும் நிகரிலை
இச்சை கடந்துவிட்டோம்
எங்கும் விடுதலை என்றிசை பாடியவ்
வெக்களிப்பில் துயில்வோம். 189

கட்டுகள் யாவையும் பொட்டென்றறுத்தபின்
காதல் வழிகடந்தோம்
முட்டும் கவலைகள் எட்டி நகர்ந்திட
மோகத்திலே கலந்தோம்
நிட்டை கடந்த நிலையினி லேமனம்
விட்டுத் துயில் புரிவோம்
பட்டப் பகலில் வெட்ட வெளியினில்
நட்ட மிட்டின் புறுவோம். 190

எங்கோ இருந்தநாம் இங்கே இழிந்ததேன்
என்பதை யாரறிவார்?
இங்கே இருந்துபின் ஏகுமிட மதும்
ஏதென யாரறிவார்?
மங்கு மயங்கொளி மார்க்கத்தி லேவழி
மத்தியில் சற்றலுத்துந்
தங்கக் கிடைத்ததித் தாரணிச் சாவடி
தர்க்க சபையலவே! 191

சத்திரத் திண்ணையைச் சார்ந்திளைப் பாறிடச்
சற்றிருந் தேகிடும் நாம்
உத்திர மெத்தனை யுள்ளதெனக் கணக்
கோதியது குறித்துச்
சத்த மிட்டும்வெறும் சர்ச்சை யிட்டும்பெருஞ்
சஞ்சலப் பட்டிருத்தல்
வித்தகமோ? சில புத்தியில் லாதவர்
வீண்செய லே யல்லவோ? 192

வந்தவர் பற்பலர் சென்றவர் பற்பலர்
வாழ்ந்தவர் பற்பல ராம்
விந்தை நடப்பினைச் சிந்தை தெளிந்திடில்
வேதனை நீங்கிவிடும்
முந்தி யிறுக்கிய பந்த விலங்கினை
முற்று மறுத்துவிட்டோம்
சுந்தரி யேமனச் சோலையில் சோபனம்
சொல்லி யுலாவிடுவோம். 193

நாடிய இன்பினை நானிலந் தோர்மணம்
நண்ணவொண் ணாது முனம்
மூடிய பண்டைய மூடவழக்குகள்
முற்று மொதுக்கி விட்டோம்
தேடிய தீஞ்சுவைத் தேறல் சுவைத்ததில்
தேவர்க ளாகிவிட்டோம்
ஆடிக் குதித்ததில் ஆழ்ந்தே இரண்டற
ஐக்கிய மாகிடுவோம். 194

மண்ணிடை நீதியின் மாண்பை யுரைத்தவர்
மற்றது வாகிவிட்டார்
கண்ணிய மாமெனக் கட்டுக ளிட்டவர்
காலத்தி னால் மறைந்தார்
புண்ணிய மாமறைப் போதகர் கூடவப்
போக்கில் புகுந்துவிட்டார்
என்னும் மனம்தானிவ் உண்மை அறிந்திடில்
ஏங்கித் தயங்கிடுமோ? 195

## ஞானம்

ஐந்தில் விளைந்ததே ஆருயிர் ஆகம்
    ஆழிதன் ஆக்கமே பூமிகள் தேகம்
ஐந்தில் விளைந்தன அங்கே தெளிந்து
    ஆடி யயர்ந்தபின் நாடி யொடுங்கி
ஐந்தினில் வந்துபின் ஐக்கிய மாகும்
    ஆவதெலா மிதே ஆகையினாலே
ஐந்திலிருப்பது நைந்திடு முன்னர்
    ஆன சுகம் பெறத் தேனிதழ்தொட்டோம். 196

உள்ளதென் றென்றைக்கும் உள்ளது கண்டாய்
    ஊக்கமும் ஆக்கமும் போக்கினில் உண்டாய்
துள்ளிக் குதிப்பதே தோழி யுணர்வாய்
    தோற்றிய சத்தியின் ஆற்றல் விரிவாம்
உள்ளதே இல்லதும் உள்ளது மாகும்
    ஒன்றினி லேபல நின்று நிலாவும்
பள்ளமும் மேடும் பரவிய வெள்ளம்
    பாய்ந்த யிடமும் பின் பாழ்நிலமாகும். 197

ஒன்றினும் தம்மனம் நின்று நிலைத்திட
    ஒப்பிடோ மாயினும் நாம்
என்றும் அழிவரி தென்னும் இயற்கையில்
    ஒன்றி வழி நடப்போம்
சென்றதும் செல்வதும் அன்று நமக்கெனச்
    சிந்தனை செய்தறிந்து
இன்றித் தனிமையில் இன்புறக் கூடினோம்
    இன்னல் கடந்து விட்டோம். 198

சோலையில் கொய்த சுகந்த மலர்கள்
சுற்றி முடித்ததை விற்றிடவந்து
சாலைவழி மனச் சஞ்சலம் கண்டு
சாம்பி நடக்கையில் சார்ந்தயென்னோடு
மூலையில் வந்துதன் மோகன மோன
முத்தம் கொடுத்து முறுவலைக் காட்டி
மாலையைத் தூக்கியென் மார்பினில் சூட்டும்
மாநில ராணியே வாணிணி நீயே. 199

கூடியளித்தநின் கொவ்வை யிதழ்த்தேன்
கொண்டதுமே மனம் விண்டு மலர
வாடிய மேனியும்வாலிபம் காண
வாட்ட மொழிந்துவாய் மேட்டிமை பாட
தேடிய மெய்ச்சுகத் தெய்விகம் ஊறத்
தேங்கு முணர்ச்சிகள் ஓங்கி நெஞ்சார
ஆடிக் குதிக்கும் பரசிவ மானேன்
ஆமென் மகேச்வரி நீ யல்லவோடி ! 200

பேதங் கடந்தது பேதமை மாளப்
பீரிட்டெழுஞ்சுக போதை மயக்கில்
வேதனை முற்றிலும் வீழ்ந்தது ஞான
வீரத்திலே மனச் சோரம் நசுங்கச்
சோதனை தாண்டிச் சுகநிலை கண்டோம்
சோர்வை மறந்ததவ் வார்வத் துடிப்பும்
ஓதருங் காதலில் ஓங்கி உயர்ந்தோம்
உற்றது வீடனில் அற்றன யாவும். 201

# யோகம்

உள்ளம் விரிந்த தொழிந்ததே துன்பம்
உள்ளம் விரிந்த துயர்ந்ததே அன்பும்
உள்ளம் விரிந்த துணர்ந்ததே அஞ்சும்
உள்ளம் விரிந்திட ஓங்குதே இன்பம். 202

கண்ணுக்கு மீறிய காட்சியு முண்டு
எண்ணுக்கு மீறிய இச்சையு முண்டு
பண்ணுக்கு மீறிய பாவுமொன் றுண்டு
மண்ணுக்குள் ளின்றிந்த மர்ம மறிந்தோம். 203

தானும் அழிந்துத் தனமு மழிந்து
வானு மதனொடும் மண்ணும் அழிய
ஊனு மழிந்ததன் உள்ளம் அழிய
நானுமிங் கென்னொடு நீயு மழிந்தோம். 204

ஒழிந்தது மற்றை உறவுக ளெல்லாம்
கழிந்தது பாசம் கடவுள ராஜேசம்
அழிந்தபின் ஆகும் அமர நிலையை
இழிந்த மெய் யோகிங் கெய்திவிட்டோமே! 205

உள்ளத் துணர்ச்சியில் ஊனைக்கடந்தோம்
உள்ளத் திணர்ச்சியில் ஊரை மறந்தோம்
உள்ளத் துணர்ச்சியின் உச்சியில் நின்றோம்
உள்ளத் துணர்ச்சியில் துள்ளிக் கலந்தோம். 206

எச்சில் முதற்குறை எல்லை கடந்தோம்
இச்சையின் மஞ்சத்தி லேறிக் கலந்தோம்
அச்ச முதற்குணம் ஆழப் புதைத்தோம்
உச்சத்திலே நின்றிங் கூமையரானோம். 207

மாய விளக்கினை மண்ணில் விளக்கித்
தூய விளக்கொளி தோன்றிடச் செய்தோம்
காய விளக்கின் கதிரொளி கொண்டே
நேயம் விளக்கிடும் நேர்வழி கண்டோம். 208

நம்மை அறிந்திலோம் நாமிது நாளாய்
தம்மை அறிந்ததில் தாம்தனி யானோம்
இம்மை மறுமை யிரண்டும் கலந்தோம்
செம்மையிலே சிவ சத்தியரானோம். 209

முந்தை வினையின் முடிச்சை யவிழ்த்தோம்
பிந்திய காலத்துப் பேச்சைக் கடந்தோம்
சிந்தை யுறங்கிடும் பந்த விளிம்பில்
தந்தமி தோமெனத் தாண்டவம் செய்தோம். 210

முன்னொடு பின்னிலை முற்று மறந்தோம்
தன்னை யறிந்தபின் தாழ்வுயர் வேது?
சின்னத் தனங்களின் சிக்கை அறுத்து
உன்னரு மின்பினில் உள்ளம் கலந்தோம். 211

மறப்பும் நினைப்பும் மறைந்தன நெஞ்சில்
இறப்பும் இருப்பும் இணைந்தன வாழ்வில்
துறப்பும் துடிப்பும் தொலைந்தன விங்கே
சிறப்பில் நிமிர்ந்தது சிந்தனை இன்றே! 212

பாழு மதங்களின் பாதையை விட்டோம்
ஊழும் வினைகளும் ஓடவைத் திட்டோம்
கூழும் அமுதெனக் கொண்டுவந் திட்டோம்
வாழும் வழியிதில் வாலையும் தொட்டோம் 213

சமரறியாத சமரசம் கண்டோம்
நமரறியாத நடுநிலைப் பட்டோம்
அமர நிலையதற் கப்புறம் சென்றோம்
குமரனும் வாலையும் கூடிக் கலந்தோம் 214

இன்பினைத் தேடிமண் ணெங்கு மலைந்தோம்
இன்பின் இருப்பிடம் இன்றிங் கறிந்தோம்
இன்பை இங்குற்றதன் அன்பில் கலந்தோம்
பின்பதன் போதையில் பேச்சற்று விட்டோம். 215



## பொருட் குறிப்பு

1—7 பதினெண்ணெழுத்தில் பாங்குற நடந்து வெண்டளை நீத்தவை விரவாதொழுகிய வந்தனைப்பொருளின் செந்துறை வெள்ளை—வள்ளி.

8—13 இருமாதேக்கிடை கூவிள இருவிள இசையின் துறைபெறும் கலியதனினமே.

14—22 எட்டீருயிர்ப்பின் கட்டளை நடையின் விரவிய தொடையில் பரவிய பொருளில் கருத்தாய் சுவையின் அறுசீர் விருத்தம்.

23—31 அழிந்ததற்கிரங்கல் முன்மொழிந்த கலிநிலைத் துறையே.

32—37 ஒழுகுவண்ணத்திற் கட்டளை தாங்கிப் பழக நாண் விலக்கும் பயன்தர நின்ற வெண்டளை நீங்கா எழுசீர் விருத்தம்.

38—44 ஒன்பானீருயிர்க் கட்டளை யுடைத்தாய் தன்பாலிணைந்த தலைவியைப் புகழும், வெண்டளையலாதவை விரவா நடைய கொண்ட வறுசீர் ஆசிரியம்.

45—48 பதினேருயிரைப் பாங்குற மடித்து பழித்துறை பகரும் மொழித்துணையாகிய எண்சீர் நடையின் அகவல் இசையே.

49—55 காஞ்சி காட்டி அகம் வலியுறுத்தும் ஒலிவேறாகிய கலிவிருத்தம்.

56—65 காஞ்சி காட்டிப் பழித்துரை பகர்ந்த ஐஞ்சீர் நடையின் கலியது இனமே.

66—87 முறை மறுத்துரைத்துச் செவியறிவுறுக்கும் துறைப்புறத்து இருமாதேக்கிடை கூவிள இருவிள இசையில் கலிபெறு துறையே.

88—92 உலகநடை உணர்த்தி இலகும் அறுசீர் அகவலினமே.

92—101 இறைமுறை பழித்த இசைபெறும் கலியின் விருத்த இனமே.

102—110 நெறிமுறை பழித்தல் இருவிளதேமா கூவிள மான கலியின் இனமே.

111—114 பழித்தவை விடுத்தல் பயன்தரும் கலி விருத்தம்.

115—122 காஞ்சியுரைத்து அகம் வலியுறுத்தது—முன்.

123—135 முன் பொருளின் மொழி பிறழா கலிநிலைத் துறை.

136—139 பழித்தவை விடுத்தல், பகர் கலிவிருத்தம்.

140—151 உலக நடை பழித்தல் ஒழுகிசை பொருந்த விளமும் மாவும் முறையுடன் விரவி மாவில் முடித்த எழுசீர் அகவல் இனமுறும் பாட்டு.

152—166 நிலையுணர்வூட்டல் நிகழ்த்தும் எட்டீருயிரின் கட்டளை நடையின் அறுசீர் விருத்தம்.

167—171 காடுவாழ்த்துக் கருதும் அறுசீர்க்கழிநெடில் விருத்தம்.

172—195 காண் விலக்கல் பொருளாகப் பழித்தவை விலக்கல் விரவிப் பயின்ற கட்டளை நடையின் ஒழுகு வண்ணத் தெழுசீர் விருத்தம்.

196—201 மெய்யுணர்வூட்டல்—ஒழுகு வண்ணத்தில் உ[illegible]கிளெனின் பண்ணிசை மடிப்பின் [illegible] விருத்தம்.

202—215 மறை—விடுத்த நடையில் தொடுத்த சொல் வில் மறைமொழி கிளக்கும் முறைபெறு கலியின் விருத்தம். விரிபொருளடக்கம்.

TAMIL NADU ARCHIVES No. 106547